நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# 10 கோடி முட்டைகள் தேங்கும் அபாயம்

First Published : 22 Aug 2011 01:54:42 AM IST



நாமக்கல்லில் உள்ள தனியார் முட்டை ஏற்றுமதி நிறுவனத்தில் வாகனங்கள் இயக்கப்படாததால் தேக்கமடைந்த முட்டைகள்.

நாமக்கல், ஆக. 21: ஞாயிறு, திங்கள்கிழமைகளிலும் முட்டைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களை இயக்குவதில்லை என கோழிப் பண்ணையாளர்கள் நலச் சங்கம் அறிவித்துள்ளது.

இதனால் நாமக்கல் மண்டலத்தில் 10 கோடி முட்டைகள் விற்பனையாகாமல் தேங்கும் அபாயம் நிலவுகிறது.

வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களாக முட்டைகளை ஏற்றிச்செல்லும் வாகனங்களை இயக்காமல் ஏற்கெனவே லாரி உரிமையாளர்களின் போராட்டத்துக்கு கோழிப் பண்ணையாளர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிலையில் மேலும் இரு தினங்கள் வாகனங்கள் ஓடாது எனக் கூறியுள்ளனர்.

சத்துணவு முட்டைகளுக்கான விநியோகம் மட்டும் ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கியுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் நலச் சங்கத் தலைவர் நல்லதம்பி நிருபர்களிடம் கூறியது:

லாரி வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவாக வெள்ளி, சனிக்கிழமைகளில் முட்டைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் இயக்கப்படவில்லை.

இதற்கிடையே கர்நாடக மாநிலத்தில் முட்டை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு வேலைநிறுத்தப் போராட்டத்தில் இருந்து அம் மாநில லாரி உரிமையாளர்கள் சங்கம் விலக்கு அளித்துள்ளது. அதேபோல், தமிழகத்திலும் அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

சத்துணவு முட்டை எடுத்துச் செல்ல தமிழ்நாடு லாரி உரிமையாளர்கள் சம்மேளனம் ஞாயிற்றுக்கிழமை அனுமதி வழங்கியது. இதைத் தொடர்ந்து, 100 வாகனங்களில் 70 லட்சம் சத்துணவு முட்டைகள் விநியோகிக்கப்பட்டன.

÷லாரி வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக மேலும் இரு நாள்கள் வாகனங்களை இயக்குவதில்லை என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதனால் நாமக்கல் மண்டலத்தில் உற்பத்தியாகும் 10 கோடி முட்டைகள் தேங்கும் அபாயம் நிலவுகிறது. திங்கள்கிழமைக்குள் வேலைநிறுத்தப் போராட்டம் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

**விவசாயத் தொழிலாளர் நலவாரியம் ரத்து: இந்திய கம்யூனிஸ்ட் எதிர்ப்பு**

First Published : 22 Aug 2011 05:21:25 AM IST

தாராபுரம், ஆக. 21: விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை தமிழக அரசு ரத்து செய்திருப்பதை எதிர்த்து சட்டப்பேரவையில் குரல் எழுப்புவோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணு தெரிவித்தார்.

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் 10-வது மாநில மாநாடு தாராபுரத்தில் சனிக்கிழமை தொடங்கியது. மாநாட்டைத் தொடக்கி வைத்து அவர் பேசியது:

நாடு சுதந்திரம் அடைந்தபோது முதல் சுதந்திர தின உரையில் நேரு, விவசாயிகளின் பிரச்னை தீர்க்கப்படும் என்றும், கண்ணீர் துடைக்கப்படும் என்று கூறினார். ஆனால், இன்றுவரை பிரச்னைகளும் தீர்க்கப்படவில்லை. மக்களின் கண்ணீரும் நின்றபாடில்லை.விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை தமிழக அரசு ரத்து செய்துள்ளது. அதை எதிர்த்து சட்டப்பேரவையில் கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் தொடர்ந்து குரல் கொடுப்பர். பொது விநியோகத் திட்டத்தால் கூடுதல் செலவினம் ஆவதாகக் கூறி அத்திட்டத்தை முடக்க மத்திய அரசு முனைப்புடன் செயலாற்றி வருகிறது. இத் திட்டம் ரத்து செய்யப்பட்டால் கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். எனவே, இம்முடிவை மத்திய அரசு கைவிட வேண்டும். சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்க உபரி நிலம் கையகப்படுத்தப்பட்டு

வருகிறது. இதனால், விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். பொருளாதார மண்டலம் அமைக்கும் முதலாளிகள், நிலம் கையகப்படுத்தும்போது நேரில் சென்று, நிலத்துக்கேற்ப சந்தை மதிப்பில் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றார்.

**பி.ட்டி பருத்தியின் ஆதிக்கம்**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 22 Aug 2011 01:49:16 AM IST

தொழில் - வணிக நாளிதழ்களில் இன்றைய விஷயம், பி.ட்டி பருத்தி விளைந்து விவசாயிகள் சிலர் குபேரர்களாகிவிட்டதாகச் சற்று மிகைப்படுத்தப்பட்ட நிஜக்கதைகள், உண்மைதான். வசதியான சில விவசாயிகளுக்கு மட்டும் கூடுதல் செலவில் நல்ல பலன்கள் கிடைத்தன. பருத்தி விளைச்சல் அதிகரித்ததும் பொய்யல்ல. ஏற்றுமதி தடையுற்றுப் பருத்தி விலை சரிந்துவிட்டதும் உண்மைதான். எனினும், உற்பத்தி உயர்வுக்கு வழங்கப்பட்ட விலை என்ன?

நிஜமாகப் பருத்தி - பி.ட்டி பருத்தி சாகுபடியில் பூச்சி - பூசணம் இல்லாமல் விளைந்ததா? உற்பத்தி உயர்ந்தாலும் உற்பத்தித்திறன் உயர்ந்ததா? பருத்தி விதைகளில் பாரம்பரியமான நல்ல ரகங்கள் அழிந்தது எப்படி? பருத்தியில் உள்ள பல்லுயிர்ப் பெருக்கத்துக்கு அடிப்படையான பல்வேறு பாரம்பரிய ரகங்கள் ஒழிக்கப்பட்டு ஒரே ரகம் அதுவே பி.ட்டி ரகம் என்ற ஒரே ரக சாகுபடி - மோனோக்ராப்பிங் என்ற அபாயம் சூழ்ந்தது எப்படி?

பொருளியல் அடிப்படையில் பருத்தி ஏற்றுமதிக் கொள்கையில் குழப்பம் ஏன்? உண்மை நிலவரத்தை இனி கவனிப்போம்.

இந்த நாட்டின் இயற்கை வளம், பல்லுயிர்ப்பெருக்கப் பண்பாடு பற்றி நிபுணர்களும், விஞ்ஞானிகளும், மருத்துவர்களும், சூழலியல் வல்லுநர்களும் என்னதான் கரடியாகக் கத்தினாலும்கூட பி.ட்டி பருத்தியின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

2004-05-ம் ஆண்டில் மொத்த பருத்தி சாகுபடி நிலப்பரப்பில் 5.6 சதவீதம் பி.ட்டி பருத்தி வகித்த நிலை, 2010-11-ல் ஏறத்தாழ 90 சதமாகிவிட்டது. மொத்த பருத்தி நிலப்பரப்பு 111.61 லட்சம் ஹெக்டேரில் பி.ட்டி பருத்தி மட்டும் 98.54 லட்சம் ஹெக்டேரில் சாகுபடியாகிறது. இது எப்படி நிகழ்ந்தது?

சொல்லப்போனால், பி.ட்டி பருத்தி விதை காரணமாக பருத்தி சாகுபடி நிலப்பரப்பு உயர்ந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் பருத்தி சாகுபடி நிலப்பரப்பு 25 லட்சம் ஹெக்டேர் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக உற்பத்தி அதிகபட்சமாக 312 லட்சம் பேல்கள் (லிண்ட் வடிவில்) என்றாலும் உற்பத்தித்திறன் 478 கிலோவிலிருந்து 475 கிலோவாகச் சரிந்துள்ளது ஏன்?

காட்டன் அட்வைசரி போர்டு வழங்கியுள்ள சாகுபடிப் புள்ளிவிவரம் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டும் உண்மை பி.ட்டி பருத்தி அறிமுகமானாலும் உற்பத்தித்திறனில் உயர்வு இல்லை. காலம் செல்லச் செல்ல உற்பத்தி குறையும்.

பி.ட்டி என்ற பெயர் ஏனெனில் பி.ட்டி விதையில் "பாசில்லஸ் துருஞ்சியன்சிஸ்' என்ற விஷக்கிருமிகள் கிரையோஜீன்ஸ் உள்ளது. பருத்தியைத் தாக்கும் காய்ப்புழுவைக் கொல்லக்கூடிய இந்த விஷக்கிருமி உள்ளடக்கிய இந்த பி.ட்டி தொழில்நுட்பத்தை 1986-ல் அமெரிக்காவில் மான்சாண்டோ உருவாக்கியது.

2002-ல் மான்சாண்டோவுடன் கூட்டு ஒப்பந்தம் வைத்து ள்ள மஹைக்கோ (மகாராஷ்டிரா ஹைபிரிட் சீட் கம்பெனி) இந்தியாவில் பி.ட்டி பருத்தி விதை உற்பத்தி செய்து மரபணுப் பொறியியல் ஒப்புதல் கமிட்டி அனுமதியைச் சுலபமாகவும் பெற்றுள்ளனர். பி.ட்டி ரகப் பருத்தி விதை மான்சாண்டோவால் காப்புரிமை செய்யப்பட்டிருப்பதால் அதற்கான ராயல்டி தொகையும் பருத்தி விதையில் அடக்கம்.

ஒரு கிலோ பி.ட்டி பருத்தி விதைக்கு ரூ. 1,000, 2,000 என்று விலைகொடுத்து விவசாயிகள் வாங்கினாலும் விளைச்சலில் பாதிப்பு குறைவு என்பதால் ஆண்டுக்கு ஆண்டு பி.ட்டி பருத்தி விதைகளின் தேவை உயரவே மஹைக்கோ மான்சாண்டோவுக்குக் கொள்ளை லாபம்.

கடந்த 5 ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான பி.ட்டி ரகங்களை உற்பத்தி செய்து விற்கின்றனர். உண்மையில் பல பி.ட்டி ரகங்கள் என்று சொல்வதெல்லாம் பச்சைப்பொய். நாக்பூர் மைய பருத்தி ஆய்வு நிறுவன விஞ்ஞானி, எல்லாம் ஒரே பி.ட்டி ரகம்தான் என்று கூறுவதுடன் எல்லாவற்றிலும் பி.ட்டி கிரையோஜீன்ஸ் மட்டுமே உண்டு என்கிறார். சில புவியியல் தட்பவெப்ப சூழ்நிலைக்கு மட்டுமே நல்ல பலன் தரும் என்கிறார். நிலைக்கும் பண்பில்லாத பி.ட்டி பருத்தியின் குறுகிய பலனை வைத்து, அமெரிக்கா, பி.ட்டி பருத்தியை இந்தியாவில் திணிப்பதன் மூலம் ஏற்றுமதிக்குரிய பல வேளாண்மைப் பயிர்களில் பி.ட்டி விஷத்தைப் பரப்பி நமது பொருளாதாரத்தை நிலைகுலைய வைக்கும் ஒரு சதித்திட்டமும் உள்ளது.

இந்தியாவை எடுத்துக்கொண்டால், பருத்தி விளையுமிடம் 3 மாநிலங்களில் மட்டுமே கணிசமாயுள்ளது. முதலாவது மகாராஷ்டிரம் (35%) குஜராத் (25%) ஆந்திரம் (15%). பருத்தி விளையக்கூடிய கரிசல் நிலம் அடங்கிய தக்காண பீடபூமியே பன்னெடுங்காலமாகப் பருத்தி விளைச்சலுக்குப் புகழ்பெற்ற இடம். நான்காவதாக மத்தியப் பிரதேசம் (5%) பஞ்சாப் (4%) ஹரியாணா (4%) ராஜஸ்தான் (2%) தமிழ்நாடு (1%) ஒரிசா (1%).

மகாராஷ்டிர மாநிலத்தில்தான் பாரம்பரியமான பருத்தி விதை ஆராய்ச்சிகள் நடந்தன. சரத் பவாரின் கைங்கர்யத்தினால் பல்வேறு மாநில அரசுகள் பருத்தி விதை ஆராய்ச்சியைக் கைவிட்டன. பொதுத்துறையில் பருத்தி விதை வினியோகத்தை பூஜ்ஜியமாக்கி விற்பனை உரிமையை ஏகபோகமாக மஹைக்கோ - மான்சாண்டோவுக்கு சரத் பவார் வழங்கி வசதியாகிவிட்ட சூழ்நிலையில், பி.ட்டியைத் தவிர்த்து வேறு எந்தப் பருத்தி விதைகளையுமே சந்தைக்குள் வராதபடி கவனிக்கப்படுகிறது. விவசாயிகள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பி.ட்டி பருத்தியை மட்டுமேதான் சாகுபடி செய்யவேண்டிய சூழ்நிலை உள்ளது. இன்று மொத்த பருத்தி நிலப்பரப்பில் 90 சதவீதத்துக்கு மேல் பி.ட்டி பருத்தி, மீதி 10 சதவீதம் மட்டுமே சில

விவசாயிகள் விடாப்பிடியாகச் சில நல்ல தேர்வு ரகங்களைக் காப்பாற்றுவதால் எஞ்சியுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக எல்லா பாரம்பரியத் தேர்வு ரகங்களும் காணாமல் போய்விடும்.

பி.ட்டி பருத்தி ரக ஏகபோக சாகுபடியால் ஏற்படக்கூடிய சூழல்கேடுகள் - மனித நலவாழ்வுக் கேடுகள் ஒருபுறம் இருக்கட்டும். பி.ட்டி பருத்தி சாகுபடியால் பூச்சி - பூசண மருந்துகளின் தெளிப்புகள் நின்றனவா? பி.ட்டி பருத்தி மூலம் நல்ல விளைச்சலைப் பெற வேண்டுமானால் முன்பைவிட அதிகமாக பூச்சிமருந்துகளைப் பயன்படுத்த வேண்டும்.

பி.ட்டி பருத்தி விதையில் சாதகமான விஷயம் காய்ப்புழுக் கட்டுப்பாடு மட்டுமே. தத்துப்பூச்சி, இலைப்பூச்சி, தண்டு உறிஞ்சி மாவுப்பூச்சி - வெள்ளை அசுவினி என்று பல முன்பைவிட அதிகமாகத் தாக்குவதுடன் புதிய புதிய பூச்சி ரகங்களும் பயிர்களைத் தாக்கி வருகின்றன. பருத்தி சாகுபடியில் மையப் பருத்தி ஆராய்ச்சி நிறுவனம் வழங்கியுள்ள தகவல் அடிப்படையில், பருத்தி சாகுபடியில் 2005-ம் ஆண்டு பூச்சி பூசண உயிர்க்கொல்லி - களைக்கொல்லிகளுக்குச் செலவான தொகை ரூ. 2,439 கோடி. 2010-ல் இதுவே 7,684 கோடி ரூபாய்களாக உயர்ந்துவிட்டது. மிக மிக மோசமான பூச்சி நிர்வாகக் கட்டுப்பாடு காரணமாக பி.ட்டி பருத்தி ரகத்தில் புதிய புதிய நோய்க்குறிகள் அரும்பிவிட்டன.

பி.ட்டி பருத்தியைப் பற்றிச் சில வியப்பான தகவல்களும் உண்டு. பாகிஸ்தானில் பி.ட்டி பருத்தி சாகுபடி இல்லை. பாகிஸ்தானில் பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளவுமில்லை. ஆனால், பி.ட்டி பருத்தி சாகுபடி இல்லாமலேயே பாகிஸ்தானில் உற்பத்தித் திறன் இந்தியாவைவிட அதிகமாயுள்ளது.

இந்தியாவில் 2010-11-ல் தலா ஹெக்டேர் விளைச்சல் 475 கிலோ. இதே ஆண்டில் பாகிஸ்தான் விளைச்சல் 700 கிலோ. பாகிஸ்தான் தவிர, பருத்தி விளையும் பல்வேறு மேற்கு ஆசிய நாடுகள், ஆப்பிரிக்க நாடுகளிலும் பி.ட்டி தொழில் நுட்பம் கடைப்பிடிக்காமல் தலா ஹெக்டேர் விளைச்சல் கூடுதலாக உள்ளது.

இதற்கு வழங்கப்படும் ஒரே விளக்கம் இந்தியாவில் மட்டுமே காய்ப்புழுவின் தாக்குதல். எவ்வளவு பூச்சிகள் புழுக்கள் இருந்தாலும், காய்ப்புழுத் தாக்குதல் ஏற்படுமானால் பஞ்சின் தரம், இழைகளின் நீளம் எல்லாம் பாதிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

உலக விவசாய வரலாற்றைச் சற்றுப் புரட்டிப் பார்த்தால், குறிப்பாக முதல் உலகப் போர்க் காலகட்டத்தில் அமெரிக்காவே பருத்தி சாகுபடியில் முதல்நிலை வகித்து வந்தது. அப்போது வாழ்ந்த ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் என்ற கறுப்பு விவசாயம் மற்றும் விவசாயப் பொருளியல் விஞ்ஞானி, பருத்தி சாகுபடியால் மண்வேகமாக வளம் இழப்பதைக் கண்டுபிடித்து பருத்திக்கு மாற்றாக வேர்க்கடலை சாகுபடியை அறிமுகப்படுத்தினார்.

வேர்க்கடலை லெகுமினஸ் பயிர் - அதாவது மண்ணில் வேர்மூலம் காற்றில் உள்ள நைட்ரஜனை உட்கொண்டு மண்ணை வளப்படுத்தும் பருப்புவகைப் பயிர் என்பதால் பருத்தி சாகுபடியால்

இழக்கப்பட்ட மண்வளம் வேர்க்கடலை சாகுபடியால் மீட்கப்பட்டதுடன் பீநட் பட்டர் - கடலை வெண்ணெயால் விவசாயிகளுக்கு லாபம் கிட்டியது. அப்போது பசுவெண்ணெய்க்கு நெருக்கடி இருந்தது. அமெரிக்க சமையலில் கடலெண்ணெய்க்கு இடம் இல்லை. கடலை வெண்ணெய்க்குத் தேவை உண்டு.

அன்றைய சூழ்நிலையில் அமெரிக்காவில் சுமார் 60,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் - அதாவது பருத்தி சாகுபடியான நிலத்தில் வேர்க்கடலை விதை ஊன்றப்பட்டது. எனினும், அமெரிக்காவில் பருத்தி சாகுபடி நிலப்பரப்பு சற்று குறைந்தது என்றாலும் இன்னமும் சுமார் 5 லட்சம் ஹெக்டேரில் பருத்தி சாகுபடி நிகழ்கிறது. அமெரிக்காவைவிட இந்தியாவில்தான் பி.ட்டி பருத்தி சாகுபடி முழுமையாக அதிக அளவில் நிகழ்கிறது.

பி.ட்டி பருத்தியின் ஆதிக்கம் நீடிக்க வாய்ப்பு இல்லை. ஏனெனில், ஆண்டுக்கு ஆண்டு பி.ட்டி பருத்தி சாகுபடிச் செலவு உயர்கிறது. பூச்சி - பூசண மருந்துச் செலவு, களைக்கொல்லிச் செலவு, விதைவிலை, ரசாயன மருந்தின் கூடுதல் உபயோகம் இழக்கப்படும் மண்வளம் ஆகியவற்றை அனுசரித்து எஞ்சிப்போனால் ஆறு அல்லது ஏழு ஆண்டுகளில் பி.ட்டி வீரியம் இழக்கும். ஏனெனில், அந்த அளவில் பருத்தி பயிரிடப்பட்ட நிலம் வளத்தை இழக்கும். இவ்வாறு மண்வளமிழந்த காரணத்தால் பி.ட்டி பருத்தியின் தலா ஹெக்டேர் விளைச்சல் குறைவதும் நிரூபணம் ஆகிவிட்டது. இதற்குச் சரியான மாற்றுவழி பருத்தியைக் கலப்புப் பயிர் சாகுபடியாக மாற்றுவதுதான். பாரம்பரியமாகப் பருத்தி இந்தியாவில் மண்வளம் இழக்காமல் சாகுபடி செய்யும் உத்திகளில் பருத்தியுடன் துவரை, சோளம், உளுந்து போன்ற லெகுமினஸ் - மண்ணில் நைட்ரஜன் சத்தை இழுக்கும் தன்மையுள்ள பயிர்களையும் சாகுபடி செய்துவந்த முறை அழிந்து விட்டதும் ஒருகாரணம்.

மண்ணில் கரிமச்சத்தை இயற்கை வழியில் உருவாக்கும்போது எந்த நோயும் தாக்காமல் விளைந்தது அந்தக்காலமாகிவிட்டது. அப்போது எகிப்திய நீண்ட இழைப்பருத்தி, கம்போடியா ரகம், கதராடைக்குரிய கருங்கண்ணி போன்ற பாரம்பரியப் பருத்தி ரகங்களை மீட்கும் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் மாநில அரசுகளின் அணுகுமுறை கண்டிக்கத்தக்கதாகும்.

பி.ட்டி பருத்தி சாகுபடியைத் தமிழ்நாட்டில் புகுத்த வேண்டாம். இங்குதான் சிறிது பாரம்பரியம் எஞ்சியுள்ளது.

**இன்றும் மழை வாய்ப்பு**

First Published : 22 Aug 2011 02:03:55 AM IST



சென்னை, ஆக. 21: தமிழகம் மற்றும் புதுவையில் திங்கள்கிழமை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் ; மாலை அல்லது இரவில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

வட கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், கேரளம் மற்றும் தமிழகத்தின் சில பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்தில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. காற்று மண்டலத்தில் ஏற்பட்டுள்ள வெப்ப சலனம் காரணமாகச் சென்னை உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சனிக்கிழமை நள்ளிரவு, இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. 2-வது கட்ட தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதும் இதற்கு முக்கிய காரணமாகும். ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி தமிழகத்தில் அதிகபட்சமாக பூந்தமல்லி, செம்பரம்பாக்கத்தில் 100 மில்லி மீட்டர் மழை பெய்திருந்தது.

மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): பள்ளிப்பட்டு, சோழவரம், தாமரைப்பாக்கம், செங்குன்றம், திருவள்ளூர் 80, சென்னை, திருத்தணி, அரக்கோணம் 70, மீனம்பாக்கம், சோளிங்கர் 60, பொன்னேரி, தேவாலா, துவாக்குடி 50, பூண்டி 40, மேட்டூர் அணை, ஓமலூர், சேலம் 30, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருப்பத்தூர், பென்னாகரம், கிருஷ்ணகிரி, வாழப்பாடி, ஏற்காடு, கூடலூர் பஜார், நடுவட்டம் 20, சிதம்பரம், ஸ்ரீமுஷ்ணம், பண்ருட்டி, கடலூர், மயிலாடுதுறை, திருமயம், ஆத்தூர், வால்பாறை, பவானி, குந்தா பாலம், திருச்சுழி 10.

வட மாநிலங்களில் கடும் பாதிப்பு: சமீபத்தில் பெய்துவரும் மழையால் உத்தரகாண்ட் மாநிலத்தில் இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளனர். பல இடங்களில் ஞாயிற்றுக்கிழமை அங்கு நிலச்சரிவு ஏற்பட்டது. அதன் காரணமாக பத்ரிநாத், கேதார்நாத் மற்றும் கங்கோத்ரி செல்லும் நெடுஞ்சாலையிலும், ரிஷிகேஷ்-கங்கோத்ரி நெடுஞ்சாலையிலும் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. வட மாநிலங்களில் பெய்து வரும் பலத்த மழையால் கங்கை, யமுனை உள்ளிட்ட நதிகளில் பல இடங்களில் அபாய கட்டத்தைத் தாண்டி வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

**வாழை சாகுபடி பயிற்சி**

First Published : 21 Aug 2011 01:55:35 PM IST

தேனி, ஆக. 20: காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மையத்தில், நபார்டு வங்கித் திட்டத்தில், உழவர் மன்ற உறுப்பினர்களுக்கு வாழை சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சிக்கு, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் இமாமுதீன் தலைமை வகித்தார். பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் வி. பொன்னுச்சாமி தொடங்கி வைத்தார். சென்டெக்ட் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ப. மாரிமுத்து, நபார்டு வங்கி பொது மேலாளர் மணி ஆகியோர் முன்னிலை வகித்தார்.

திசு வாழை சாகுபடி தொழில்நுட்பம், உற்பத்தி பெருக்கத் திட்டம், நுண்ணூட்ட அம்சங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முருகபிரபு, தோட்டக்கலை உதவி இயக்குநர் சுரேஷ் ஸ்ரீராம், மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் எம். பாண்டியன், சின்னமனூர் உழவர் மன்ற கூட்டமைப்புத் தலைவர் முத்துமாணிக்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கொப்பரை ஏலம் நிறுத்தம்**

First Published : 21 Aug 2011 12:43:40 PM IST

ஈரோடு, ஆக. 20: கூலி பிரச்னை மற்றும் லாரிகள் வேலைநிறுத்தம் காரணமாக அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கொப்பரை ஏலம் நிறுத்தப்பட்டது.

இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நெல், எள், நிலக்கடலை, தேங்காய் கொப்பரை விளை பொருட்களின் ஏலம் நாள்தோறும் நடைபெற்று வருகிறது. இங்கு சில மாதங்களாக சுமை தூக்கும் தொழிலாளர்கள் கூலி பிரச்னை இருந்து வருகிறது. மற்ற பொருட்களுக்கு கூலி முடிவான நிலையில் கொப்பரைக்கு மட்டும் கூலி பிரச்னை இழுபறியாக இருந்து வருகிறது. கொப்பரை இறக்கி ஏற்ற குவிண்டாலுக்கு ரூ.10.50 மட்டுமே கூலி வழங்கப்பட்டு வந்தது. இதை ரூ.45 ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என சுமை தூக்கும் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இப்பிரச்னை தொடர்பாக ஈரோடு விற்பனைக் குழு அதிகாரிகள் முன்னிலையில் கடந்த வாரம் பேச்சுவார்த்தை நடந்தது. இதில் உடன்பாடு ஏற்படாததால், தொழிலாளர்கள் வேலை புறக்கணிப்பில் ஈடுபட்டனர். மேலும் லாரி வேலை நிறுத்தம் காரணமாக வியாபாரிகளும் வராததால் இங்கு வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த கொப்பரை ஏலம் திடீரென நிறுத்தப்பட்டது.

இதுகுறித்து ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரி ஒருவர் கூறியது: லாரிகள் வேலை நிறுத்தம் காரணமாக வெளியூர்களில் இருந்து வியாபாரிகள் வரவில்லை.

உள்ளூர் விவசாயிகளும் வழக்கத்தை விட குறைந்த அளவே கொப்பரைகளை விற்பனைக்குக் கொண்டு வந்திருந்தனர். சுமை தூக்கும் தொழிலாளர்களிடம் ஞாயிற்றுக்கிழமை (ஆக.21) மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு சுமூக முடிவு ஏற்படுத்தப்படும்.

**நாள்தோறும் ரூ.10 கோடி மஞ்சள் வர்த்தகம் பாதிப்பு!**

First Published : 21 Aug 2011 11:22:14 AM IST

ஈரோடு,ஆக. 20: லாரி வேலைநிறுத்தப் போராட்டம் முடியும் வரை ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் ஏலத்தை நிறுத்திவைக்க முடிவு செய்துள்ளதால் நாள்தோறும் ரூ.10 கோடி அளவுக்கு வர்த்தகம் பாதிக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

மஞ்சள் வர்த்தகத்துக்கு ஈரோடு பிரபலம். இங்குள்ள 150க்கும் மேற்பட்ட குடோன்களில் தமிழகம் முழுவதும் இருந்து விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைத்து விற்கின்றனர். சில மாதங்களாக ஈரோடு மஞ்சள் விலை சரிந்து வருவதால் இருப்பு வைக்கப்பட்டுள்ள மஞ்சளை விற்க விவசாயிகள் முன்வரவில்லை. இதனால் குடோன்களில் மஞ்சள் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

லாரி வேலைநிறுத்தம் 2வது நாளாகத் தொடரும் நிலையில், மார்க்கெட்டில் ஏலம் விடப்படும் மஞ்சள் மூட்டைகளை வெளிமாநிலம் மற்றும் வெளியூர்களுக்குக் கொண்டு செல்ல முடியாமலும், குடோன்களில் வைக்கப் போதிய இடவசதி இல்லாததாலும் வேலைநிறுத்தப் போராட்டம் முடியும் வரை மஞ்சள் ஏலத்தை நிறுத்திவைக்க ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் தனியார் மார்க்கெட்டுகள் முடிவு செய்துள்ளன.

இதனால் நாள்தோறும் ரூ.10 கோடி மஞ்சள் வர்த்தகம் பாதிக்கப்படும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**உதகையில் 25-ல் விவசாயிகள் போராட்டம்**

First Published : 21 Aug 2011 12:47:49 PM IST

உதகை, ஆக. 20: நீலகிரி மாவட்டத்தில் யானைகள் வழித்தட பிரச்னை மற்றும் தனியார் காடுகள் பாதுகாப்பு சட்டம் உள்ளிட்டவற்றிலிருந்து பாதுகாக்க வலியுறுத்தி விவசாயிகள் நடத்தும் தர்ணா போராட்டத்தில் பிருந்தா காரத் பங்கேற்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலர் என்.வாசு, மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலர் ஆர்.பத்ரி மற்றும் சிஐடியூ மாவட்ட செயலர் வி.வி.கிரி ஆகியோர் உதகையில் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை தெரிவித்தது:

÷நீலகிரி மாவட்டத்தில் யானைகள் வழித்தடம் எனக் கூறி தமிழக அரசு 400 சர்வே எண்களில் உள்ள 7,000 ஏக்கர் விவசாய நிலங்களை கையகப்படுத்த தீர்மானித்துள்ளது. அத்துடன் 1991ம் ஆண்டில் வெளியிட்ட அரசாணையை பயன்படுத்தி 46,000 ஏக்கர் பட்டா நிலங்களையும் தனியார் வனங்களாக அரசு அறிவித்துள்ளது.

÷இதன் காரணமாக 91-ம் ஆண்டிலிருந்து மாவட்டத்தில் இப்பகுதிகளில் செய்யப்பட்ட அத்தனை நிலப்பதிவுகளும் ரத்து செய்யப்பட உள்ளன. இதனால் இந்நிலங்களில் இருப்போர் எந்நேரத்திலும் வெளியேற்றப்படலாம் என்ற நிலை உருவாகியுள்ளது.

சோலூர் கிராமத்திலுள்ள சுமார் 4000 ஏக்கர் நிலங்களில் 3,700 ஏக்கர் நிலங்கள் வனங்களாக மாறியுள்ளதால் இக்கிராமமே முழுமையாக பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. 1991-ம் ஆண்டில் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையின்படி இப்பகுதிகளில் 100-க்கும் அதிகமான இந்து கோவில்களும், 63 மசூதிகளும், 40 தேவாலயங்களும், 38 மேனிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளும், 5 சுகாதார நிலையங்களும், 3 கால்நடை மருத்துவமனைகளும், ஏராளமான தேயிலை தொழிற்சாலைகளும், மின் நிலையங்களும், காவல் நிலையங்களும் வனம் என குறிப்பிட்ட பகுதியின் கீழ் வருகின்றன.

1991ம் ஆண்டின் அறிவிக்கையிலிருந்து சிறு விவசாயிகளை பாதுகாக்க அப்போதைய அதிமுக அரசு பொதுமக்களின் கடுமையான போராட்டத்திற்கு பிறகு முன்வந்தது. அப்போது மாவட்ட ஆட்சியராக இருந்த லீனா நாயர் எந்த வகையிலும் பொதுமக்கள் நிலங்களை வாங்குவதற்கோ, விற்பனை செய்வதற்கோ எத்தகைய பாதிப்பும் ஏற்படுத்தப்பட மாட்டாது எனவும், மரங்களை வெட்டுவதற்கு மட்டும் மாவட்ட ஆட்சியரிடமிருந்து அனுமதி பெற வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால், 2009ம் ஆண்டில் மாவட்ட ஆட்சியராக இருந்த ஆனந்த் பாட்டீல் இப்பகுதிகளில் நிலம் வாங்கவோ, விற்பனை செய்யவோ தடை விதித்து உத்தரவிட்டிருந்தார். தற்போது நிலவும் இத்தகைய பிரச்னைகளால் இந்நிலங்களையே நம்பி வாழும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கே உள்ளது.

1991ம் ஆண்டில் சிறு விவசாயிகளை பாதுகாக்க நடவடிக்கை எடுத்ததைப்போலவே தற்போதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். யானைகள் வழித்தட திட்டத்தால் எந்த விவசாயியையும் வெளியேற்றாமல் ஏற்கனவே அறிவித்தவாறு 583.42 ஏக்கர் நிலத்தை மட்டும் யானைகள் வழித்தட நிலமாக அறிவிக்க வேண்டும்.

இத்தகைய கோரிக்கைகளை வலியுறுத்தி நீலகிரி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் ஒன்றிணைந்து வரும் 25-ம் தேதி உதகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே மாபெரும் தர்ணா போராட்டத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பிருந்தா காரத் பங்கேற்கிறார்.

**வேளாண்மை கூட்டுறவு சங்கம் மூலம் ரூ.85 லட்சம் கடனுதவி**

First Published : 21 Aug 2011 12:45:00 PM IST

உதகை, ஆக. 20: உதகை அருகேயுள்ள சாந்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் சார்பில் நடப்பாண்டில் இதுவரை ரூ.85 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளதாக, மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் ஆர்.தயாளன் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள 75 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் சார்பில் டெபாசிட் சேகரிப்பு இயக்கம் நடைபெற்று வருகிறது. இதில் சாந்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நடைபெற்ற டெபாசிட் சேகரிப்பு முகாமில் ஒரே நாளில் ரூ.1.18 லட்சம் டெபாசிட் தொகையாக திரட்டப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்ற மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் ஆர்.தயாளன் பேசியதாவது:

சாந்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் சார்பில் நடப்பாண்டில் இதுவரை ரூ.50 லட்சம் நகைக்கடனாக வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தில் 1,644 உறுப்பினர்கள் உள்ளனர். சங்கத்திலிருந்து உறுப்பினர்கள் வாங்கிய பயிர்க்கடன் அனைத்தும் திரும்ப செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ரூ.4 லட்சம் கறவை மாட்டுக் கடனாகவும், ரூ.31 லட்சம் விவசாயக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், வைத்தியநாதன் கமிட்டியின் பரிந்துரையின்படி ரூ.50 லட்சம் நிதியுதவி இச்சங்கத்திற்காக பெறப்பட்டுள்ளதாகவும் இணைப்பதிவாளர் தயாளன் தெரிவித்தார். மேலும், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு ரூ.10 லட்சம் கடனுதவி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் துணைப் பதிவாளர் அ.ஜீவா, மத்திய கூட்டுறவு வங்கி பொது மேலாளர் ஜே.மணி, சங்கத்தின் தனி அலுவலர் ராமன், கூட்டுறவு பிரச்சார அலுவலர் தருமன், சோரகுண்டு ஊர் தலைவர் திம்மன், கெரடா ஊர் தலைவர் ஜோகி ஆகியோரும் பங்கேற்று பேசினர். சங்கத்தின் செயலர் ரமேஷ் நன்றி கூறினார்.

**பசுந்தேயிலை கொள்முதல் மையங்களுக்கு கூடுதல் பைகள்**

First Published : 21 Aug 2011 12:44:40 PM IST

மஞ்சூர்,அக. 20: குந்தா கூட்டுறவுத் தேயிலை ஆலை, பசுந்தேயிலை கொள்முதல் மையங்களுக்கு கூடதலாக பைகள் வழங்க வேண்டும் என மகாசபை கூட்டத்தில் வலி யுறுத்தப்பட்டது.

மஞ்சூர் அருகே உள்ள எடக்காடு குந்தா கூட்டுறவுத் தேயிலை ஆலையின் மகாச பைக் கூட்டம் தேயிலை ஆலை வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

ஹாலா கவுடர் தலைமை வகித்தார். செவணா கவுடர், தாத்தா கவுடர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தனி அலுவலர் இந்திரா வரவேற்றார். 2009-10ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது.

2010-11ம் ஆண்டு நிர்வாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. 2012-13ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு கணக்கு தாக்கல் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து ஆலை மேம்பாடு குறித்து விவசாய அங்கத்தினர்களின் கருத்து கேட்கப்பட்டது. பசுந்தேயிலை கொள்முதல் மையங்களுக்கு கூடுதலாக பைகளை அனுப்ப வேண்

டும். தேயிலை வரத்து அதிகரிக்கும் காலங்களில் கூடுதலாக தொழிலாளர்களை அம ர்த்த அவர்களுக்கு கூடுதல் கூலி வழங்க வேண்டும். கோட்டா முறையை அமல்படுத் துவதை கைவிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. குந்தா கூட்டுறவுத் தேயிலை ஆலை தொடங்கப்பட்டு 50 ஆண்டுகள் ஆனதால் ஆலையின் பொன் விழாவை குறிக்கும் வகையில் பொன்விழா வளாகம் அமைக்க வேண்டும். அதற்கு 5 பேர் அடங்கிய குழுத் தேர்வு செய்ய வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

அங்கத்தினர்கள் சகாதேவன், கணபதி, விவேகானந்தன், டி.எம்.சந்திரன், கோபாலகிருஷ்ணன், ரங்கசாமி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 79.26 அடி**

First Published : 21 Aug 2011 11:48:22 AM IST

தஞ்சாவூர், ஆக. 20: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 79.26 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 13,357 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 9,996 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையில் இருந்து வினாடிக்கு காவிரியில் 3,000 கன அடி, வெண்ணாற்றில் 7,510 கன அடி, கல்லணைக் கால்வாயில் 3,004 கன அடி, கொள்ளிடத்தில் 608 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**விவசாயிகள் கலந்துரையாடல்**

First Published : 21 Aug 2011 12:27:32 PM IST

வந்தவாசி, ஆக. 20: வந்தவாசியை அடுத்த தெய்யார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் விவசாயிகள் கலந்துரையாடல் கூட்டம் சங்க வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் தனி அலுவலர் பெ.மணி தலைமை வகித்தார். செயலர் ஆ.உதயகுமார் வரவேற்றார்.கரும்பு வெட்டுதல், சோகை உரித்தல், கரும்பு கத்தைகளை ஏற்றுதல் உள்ளிட்டவற்றுக்கு இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது குறித்து செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்பு அலுவலர் பி.குணசேகரன் விளக்கினார்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் குறைந்த வாடகையில் நெல் நடவு இயந்திரம், களை எடுக்கும் கருவி, மினி டிராக்டர், பவர் டிரில்லர் ஆகியன கிடைப்பது குறித்து கூட்டுறவு சார்பதிவாளர் கே.ஜெயபால், முதுநிலை ஆய்வாளர் பி.சுரேஷ், கள மேலாளர் கே.வெற்றிவேலன் ஆகியோர் பேசினர்.

மேலும், செம்மை நெல் சாகுபடிக்கான முறைகள், நிலத்தின் தன்மை அறிந்து கொள்ளும் மண் பரிசோதனை, நீர் பரிசோதனை உள்ளிட்டவை குறித்து விவசாயிகள் கலந்துரையாடினர்.

**முட்டை விலை**

First Published : 21 Aug 2011 10:14:04 AM IST

நாமக்கல், ஆக. 20: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.47, சென்னையில்
ரூ. 2.45.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணை ப் புக் குழு சனிக்கிழ மை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்
முதல் விலை கிலோ ரூ.42, முட்டைக் கோழி கிலோ ரூ.38.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை நெல் விநியோகம்**

First Published : 21 Aug 2011 11:42:02 AM IST

சீர்காழி, ஆக. 20: நாகை மாவட்டம், சீர்காழி அருகே விவசாயிகளுக்கு 50 சத மானிய விலையில் விதை நெல் சனிக்கிழமை வழங்கப்பட்டது.

சீர்காழி அருகே தில்லைவிடங்கன் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு, வேளாண் துறை சார்பில் விதை கிராமத் திட்டத்தின் கீழ், 50 சத மானிய விலையில் விதை நெல் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு சீர்காழி வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். நாகை மாவட்ட வேளாண்மைத் துறை துணை இயக்குநர் ராஜேந்திரன், தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநர் கணேசன், துணை வேளாண்மை அலுவலர் பொம்முராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக சீர்காழி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ம. சக்தி கலந்து கொண்டு, பயனாளிகள் 100 பேருக்கு 50 சத மானிய விலையில் நெல் விதைகளை வழங்கினார்.

விழாவில் அதிமுக மாவட்ட அவைத் தலைவர் செல்லையன், சீர்காழி, கொள்ளிடம் ஒன்றியத் தலைவர்கள் ராஜமாணிக்கம், ஜெயராமன், முன்னாள் எம்.எல்.ஏ. பூராசாமி, தில்லைவிடங்கன் ஊராட்சித் தலைவர் இளங்கோவன், அதிமுக நிர்வாகிகள் ராஜ், மணி, திருமாறன், கிராம நாட்டாமை மனோகரன், சீர்காழி வேளாண்மை உதவி அலுவலர்கள் ராமகிருஷ்ணன், அசோகன், சிவபெருமாள், தமிழரசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**இயற்கை உரங்களை பயன்படுத்த அறிவுறுத்தல்**

First Published : 21 Aug 2011 11:42:37 AM IST

பொறையாறு, ஆக. 20: விவசாயிகள் இயற்கை உரங்களையே அதிகமாகப் பயன்படுத்த வேண்டும் என மயிலாடுதுறை மக்களவை உறுப்பினர் ஒ.எஸ். மணியன் அறிவுறுத்தினார்.

நாகை மாவட்ட வேளாண்மைத் துறை சார்பில் விதைக் கிராம திட்டம் குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் செம்பனார்கோவில் வட்டாரத்திற்குள்பட்ட விசலூர், திருவிளையாட்டம் ஊராட்சிகளில் சனிக்கிழமை நடைபெற்றது.

பயிற்சியை தொடக்கிவைத்து ஒ.எஸ். மணியன் பேசியது:

பல்வேறு காரணங்களால் விவசாய நிலங்களின் பரபரளவு குறைந்து வருகிறது. பருவநிலை மாற்றம், இயற்கை சீற்றம் உள்ளிட்ட காரணங்களால் விவசாய உற்பத்தியும் குறைந்து வருகிறது.

ஆனால், உணவுத் தேவை அதிகமாகி வரும் நிலையில், மத்திய, மாநில அரசுகள் வேளாண் துறையில் பல்வேறு புதிய தொழில் நுட்பங்களையும், புதிய முறைகளையும் புகுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

சிக்கனமான செலவில் அதிக விளைச்சல் தரக்கூடிய பயிர்கள், நோய்களை தாங்கி வளரக் கூடிய பயிர்கள் என வேளாண் வல்லுநர்கள் புதிய ரகங்களை கண்டுபிடித்து வருகிறார்கள். விவசாயிகள் இப் பயிர்களை பயிரிடும் முறை குறித்த பயிற்சிகளை பெற்று நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் ரசாயன மருந்து, உரங்களை பயன்படுத்துவதற்கு தடை வரலாம். அதனால், விவசாயிகள் இயற்கை உரங்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும்.

இயற்கை உரங்களை பயன்படுத்துவதால் எந்த வகையிலும் விளைச்சல் இழப்பு ஏற்படாது என்றார்.

நிகழ்ச்சியில் பூம்புகார் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். பவுன்ராஜ் பேசினார்.

தொடர்ந்து விவசாயிகளுக்கு மானிய விலையிலான வேளாண் இடுபொருள்களை ஒ.எஸ். மணியன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் செம்பனார்கோவில் வேளாண் உதவி இயக்குநர் ச. சுப்பையன், துணை வேளாண் அலுவலர் சி. கண்ணன், உதவி வேளாண் அலுவலர் எஸ். உதயசூரியன், கல்வி விடுதி குழு உறுப்பினர் கே.வி. ஜனார்த்தனன், ஒன்றிய குழு உறுப்பினர் ஏ.அப்துல் சுபஹன், விசலூர் ஊராட்சி தலைவர் வி.ஜி. கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தமிழகத்தில் கனமழை: 24 மணி நேரத்துக்கு நீடிக்கும்**

First Published : 21 Aug 2011 03:57:45 PM IST

சென்னை, ஆக. 21: தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று இரவு பலத்த மழை பெய்தது. மேலும் 24 மணி நேரத்துக்கு மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம் மாவட்டங்களில் இடியுடன் விடிய விடிய பலத்த மழை பெய்தது பெய்தது. இதனால் சென்னையில் பல இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது.

பூந்தமல்லி, செம்பரம்பாக்கத்தில் அதிகபட்சமாக 10 செ.மீ. மழையும், திருவள்ளூர், செங்குன்றத்தில் 8 செ.மீ. மழையும், சென்னை நுங்கம்பாக்கத்தில் 7 செ.மீ. மழையும் பதிவானதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்தது.

மேலும் வெப்ப சலனம் காரணமாக தமிழகம், புதுவையில் அடுத்து 24 மணி நேரத்திற்கு இடியுடன் கூடிய கனமழை பெய்யும். இந்த மழை சில நாட்களுக்கு தொடரும். குறிப்பாக சென்னையில் இரவு நேரங்களில் ஆங்காங்கே கனமழை பெய்யும் என வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

**விவசாய நிலங்களை பாதுகாக்க சட்டம் வேண்டும்: மேதா பட்கர்**

First Published : 21 Aug 2011 09:37:00 AM IST

புது தில்லி, ஆக. 21: விவசாய நிலங்களைப் பாதுகாக்க சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என சமூக சேவகர் மேதா பட்கர் வலியுறுத்தினார்.

ஜன லோக்பால் சட்டம் நிறைவேற்றக் கோரி, அண்ணா ஹசாரே குழுவினர் உண்ணாவிரத போராட்டத்தை தில்லி ராம் லீலா மைதானத்தில் மேற்கொண்டு வருகின்றனர்.

போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், ராம் லீலா மைதானத்துக்கு சனிக்கிழமை வந்த மேதா பட்கர் பேசியது:

ஊழலுக்கு எதிரான போராட்டம் அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது. லஞ்சம் எல்லாத் துறைகளிலும் தலைவிரித்தாடுகிறது. 2000-ம் ஆண்டு முதல் விளைநிலங்களை அரசே தனியார் நிறுவனங்களுக்குத் தாரை வார்த்து வருகிறது.

இந்த ஆபத்தான போக்கால், நாட்டில் விளைநிலங்கள் குறைந்து, உணவு உற்பத்திப் பாதிக்கப்பட்டுள்ளது. விளைநிலங்களை பாதுகாக்க சட்டங்கள் இயற்ற வேண்டும்.

இந்து, முஸ்லிம், சீக்கியர்கள், என மதத்தால் வேறுபட்டாலும், நாம் அனைவரும் சகோதரர்கள் என்ற முழக்கத்தை, இனி சகோதர, சகோதரிகள் என மாற்றி முழங்க வேண்டும். இது போன்ற போராட்டங்களில் அதிக அளவில் பெண்களையும் ஈடுபடுத்த வேண்டும்.

நில ஊழலில் கொள்ளையடிக்கும் பணம், தேர்தலில் பயன்படுத்தப்படுகிறது. இந்த நாட்டின் கனிம வளங்களை திருடிச் செல்ல பெரும் கம்பெனிகள் திட்டமிட்டு வருகின்றன.

இந்த முயற்சிகளை இது போன்ற வலுவான போராட்டங்களால் முறியடிக்க வேண்டும்.

ஊழலுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெறுவது போல், விவசாய நிலங்களைப் பாதுகாக்கவும் போராட்டங்கள் நடைபெற வேண்டும், அதற்கு நாம் அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்றார் மேதா பட்கர்.

பேச்சின் நிறைவில், தேசப் பக்திப் பாடலை மேதா பட்கர் உற்சாகமாகப் பாட, திரண்டிருந்த கூட்டமும் சேர்ந்து பாடியது.

தினமலர்

**தமிழகம், ஆந்திரா, கர்நாடகாவில் தக்காளி விளைச்சல் அமோகம்**

ஆகஸ்ட் 22,2011,03:04



தர்மபுரி:தமிழகம், ஆந்திரா, கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களிலும், தக்காளி விளைச்சல் அதிகரித்துள்ளதால், விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட தக்காளி விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். ஆந்திரா, கர்நாடகா மாநில எல்லையில் உள்ள கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் அதிக அளவில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது.

இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிக்கும் ஆந்திரா, கர்நாடகா மாநிலத்துக்கும் அதிக அளவில் தக்காளி விற்பனைக்கு அனுப்பி வைக்கப் படுகிறது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தக்காளி விற்பனைக்கு என ராயக்கோட்டையிலும், தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, பென்னாகரம் ஆகிய இரு இடங்களில் பிரத்தியேக சந்தைகளும் உள்ளன.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு, பென்னாகரம் ஆகிய சந்தைகளில், 20 கி.மீட்டர் சுற்றளவில் உள்ள கிராம விவசாயிகள் தக்காளியை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.இப்பகுதியில் தக்காளிக்கு சிறந்த சந்தை வாய்ப்புகள் இருப்ப தால், அதிக அளவில் விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்து வருகின்றனர்.ஆண்டு முழுவதும்இப்பகுதியில் தக்காளி விற்பனை அமோகமாக நடக்கும்.ஆண்டுதோறும் அக்டோபர் முதல் ஜூலை வரையில் தக்காளி சீசன் களை கட்டும்.

தற்போது, பென்னாகரம் மற்றும் பாலக்கோடு சந்தையில் இருந்து தினம், 6 முதல், 10 டன் தக்காளி வெளியிடங்களுக்கு விற்பனைக்கு செல்கிறது. கடந்தாண்டு ஆகஸ்ட் மாதத்தில் தக்காளி விலை உச்சத்தில் இருந்தது. இவ்வாண்டு, ஆந்திரா, கர்நாட கா, தமிழகம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தக்காளி உற்பத்தி அதிகரித்துள்ளதால், விலை பல மடங்கு வீழ்ச்சி அடைந்துள்ளது.

தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருந்து, திருச்சி, நெல்லை, மேட்டூர், திருப்பத்தூர், குமாரபாளையம் உள்ளிட்டபகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் அதிகளவில் தக்காளியை கொள்முதல் செய்து வருகின்றனர். பாலக்கோடு சந்தைக்கு வரும் தக்காளி, 15 நாள் வரையில் கெடாமல் இருப்பதால், கேரளவிற்கு அதிக அளவில் அனுப்பி வைக்கப்படுகிறது.பாலக்கோட்டில் உள்ள சந்தையில் இதற்காக, 60 கடைகள் கட்டப்பட்டு விற்பனை நடக்கிறது.

தென் மாவட்டங்களுக்கு அதிகளவில்தக்காளி விற்பனை செய்யப்பட்ட நிலையில், தற்போது, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் அதிக அளவில் தக்காளி உற்பத்தி செய்யப்பட்டிருப்பதால், தென் மாவட்ட வியாபாரிகள் கர்நாடகா மாநிலம் கோலார், பெங்களூருசந்தைக்கும், ஆந்திர மாநிலம் குப்பம், பலமனேரி, திருப்பதி சந்தைக்கும் சென்று கொள்முதல் செய்து வருகின்றனர்.

கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம்,பாலக்கோடுசந்தையில் ஒரு கூடைதக்காளி,(15 கிலோ)600ரூபாய் வரையில் விற்பனையானது. நேற்றைய சந்தையில் ஒரு கூடை , 60 ரூபாய் முதல், 80 ரூபாய் வரையில் விற்பனையானது.கடந்த ஆண்டை போல் இவ்வாண்டு விலையை எதிர்பார்த்த

நிலையில், உற்பத்தி அதிகரிப்பினால், விலை வீழ்ச்சி அடைந்ருப்பதால் விவசாயிகள் பெரும் கலக்கம் அடைந்துள்ளனர்.

'ஹைபிரீட்' ரகங்களுக்கு வரவேற்பு:நாட்டு தக்காளியை விட ஹைபிரீட் தக்காளிகளுக்கு சந்தையில் வரவேற்பு உள்ளது. மேலும், இந்த ரகங்கள் நீண்ட நாள் கெட்டு போகாமல் இருப்பதோடு, சேதம் அதிகம் ஏற்படுவ தில்லை.இதனால், இந்த ரக தக்காளியான 618, 3140, உத்ரா, ரேட் ரூபி, பூமிகா உள்ளிட்ட ரக தக்காளிகள் அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. நாட்டு ரக தக்காளிகள் சந்தையில் எப்போதும் மற்ற ரகங்களை விட கூடைக்கு, 20 ரூபாய் அதிகம் விற்பனையானாலும், உள்ளூர் சந்தைக்குமட்டுமே நாட்டு ரகங்கள் விற்பனைக்கு செல்கிறது.

**முட்டை உற்பத்தி அதிகரிப்பு**

ஆகஸ்ட் 22,2011,03:05



நாமக்கல்:இந்திய அளவில் முட்டை உற்பத்தியில், நாமக்கல் சிறந்து விளங்கி வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் முட்டைகள், தமிழகம் மட்டுமின்றி கேரளா உள்ளிட்ட வெளிமாநிலம் மற்றும் வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கோழிப்பண்ணைகளில், முட்டை உற்பத்தியை அதிகப்படுத்தவும், தரமான முறையில் முட்டை வழங்கவும் பல்வேறுயுக்திகள் கையாளப்பட்டு வருகின்றன.

கடந்த, 10 ஆண்டுகளில், முட்டை உற்பத்தி, 100 சதவீதம் அதிகரித்துள்ளது. 2001ம் ஆண்டு, ஒரு கோடியே, 18 லட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டன. 2002ம் ஆண்டு, ஒரு கோடியே, 35 லட்சமும், 2003ம் ஆண்டு, ஒரு கோடியே, 41 லட்சம் முட்டைகளும் உற்பத்தி செய்யப்பட்டன. அதையடுத்து, 2005ம் ஆண்டு, ஒரு கோடியே, 64 லட்சம் முட்டைகளும், 2006ம் ஆண்டு, 2 கோடியே, 11 லட்சம் முட்டை உற்பத்தி செய்யப்பட்டன.

2007ம் ஆண்டு பறவைக் காய்ச்சல் பீதி காரணமாக, முட்டை உற்பத்தி, 2 கோடியாக குறைந்தது.

அதற்கடுத்த ஆண்டு, 2 கோடியே,48 லட்சம் முட்டைகளும், 2009ம் ஆண்டு, 2 கோடியே 36 லட்சம் முட்டைகளும்,2010ம் ஆண்டு,2 கோடியே, 57 லட்சம் முட்டைகளும் உற்பத்தியாகின்றன.நடப்பு 2011ம் ஆண்டு ஜூலை மாதம் வரை, 2 கோடியே, 85 லட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

முட்டை ஏற்றுமதியில் ஏற்பட்ட தேக்கம்,தீவனப் பொருள் விலையேற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால், முட்டை உற்பத்தியை மேலும் உயர்த்த முடியாத நிலை உள்ளது. இல்லையெனில், 3 கோடிக்கும் அதிகமாக முட்டை உற்பத்தி மேற்கொள்ள முடியும் என, கோழிப் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**கண்டலேறு அணையிலிருந்து வரும் கிருஷ்ணா நீர் அளவு அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,02:17 IST

ஊத்துக்கோட்டை : கண்டலேறு அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டதாலும், சாய் கிருஷ்ணா கால்வாய் அமைந்துள்ள பகுதிகளில் பெய்து வரும் மழையாலும், தமிழகத்திற்கு வரும் கிருஷ்ணா நீரின் அளவு அதிகரித்துள்ளது.சென்னை மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய, ஒப்பந்தப்படி, ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து கிருஷ்ணா நீர், ஜூன் 21ம் தேதி முதல் திறந்து விடப்பட்டது. இரண்டு நாட்களுக்குப் பின், தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாயின்டை அடைந்தது.தொடர்ந்து வந்து கொண்டிருந்த கிருஷ்ணா நீர், ஆகஸ்ட் 15ம் தேதி வரை, 3 டி.எம்.சி., அளவிற்கு வந்துள்ளது. ஆகஸ்ட் 17ம் தேதி முதல் கிருஷ்ணா நீர், வினாடிக்கு 800 கன அடியாக குறைக்கப்பட்டதால், தமிழகத்திற்கு வினாடிக்கு 109.14 கன அடியாக குறைந்தது.இந்நிலையில், இரு நாட்களுக்கு முன், கண்டலேறு அணையிலிருந்து வினாடிக்கு, 1,120 கன அடியாக கிருஷ்ணா நீர் திறந்து விடுவது அதிகரிக்கப்பட்டது. மேலும், சாய்கிருஷ்ணா கால்வாய் உள்ள பகுதிகளில் தொடர் மழை பெய்து வருகிறது.இதன் காரணமாக, தமிழகத்திற்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரிக்கத் துவங்கியது. நேற்று காலை, 6 மணி நிலவரப்படி, தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாயின்ட்டிற்கு வினாடிக்கு, 533 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.பூண்டி ஏரி நிலவரம்: பூண்டி ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால், ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை 6 மணி நிலவரப்படி, கிருஷ்ணா நீர் வினாடிக்கு, 393 கன அடியும், மழைநீர், 361 கன அடியுமாக, மொத்தம், 754 கன அடி நீர் வருகிறது.ஏரியிலிருந்து, "லிங்க்' கால்வாய் மூலம் வினாடிக்கு, 94 கன அடியும், "பேபி' கால்வாய் மூலம், 50 கன அடி நீரும் புழலேரிக்கு அனுப்பப்படுகிறது. ஏரியில் தற்போது, 2008 மில்லியன்

கன அடி நீர் உள்ளது. ஏரியின் நீர் மட்டம், 31.11 அடி.

**தீவனங்கள் விலை உயர்வால் விவசாயிகள் தவிப்பு : தீனி கிடைக்காததால் கால்நடைகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,02:11 IST

திருவள்ளூர் : கால்நடை தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மிகவும் தவித்து வருகின்றனர். இதனால், விவசாயிகள், கால்நடைகளுக்கு போதிய தீனி வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.திருவள்ளூர் மாவட்ட மக்களின் முக்கியத் தொழில், விவசாயம். இதில் அதிகளவில் நெற்பயிர்கள் பயிரிடப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் ஆடு, மாடு போன்ற கால்நடைகளையும் வளர்த்து வருகின்றனர்.தங்கள் நிலத்தில் அறுவடை செய்தபிறகு கிடைக்கும் வைக்கோலையும், வயல் வரப்புகளில் உள்ள புற்களையும் மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்தி வருகின்றனர். பால் கொடுக்கும் மாடுகளுக்கு கூடுதலாக தவிடு, கோதுமை பொட்டு, கடலை பொட்டு, இலை பொட்டு வழங்குகின்றனர்.சிலர், கடலை புண்ணாக்கு, எள்ளு புண்ணாக்கை ஊறவைத்தும் மாடுகளுக்கு கொடுக்கின்றனர். இந்நிலையில், கால்நடைகளுக்கு கொடுக்கப்படும் தீவனங்களின் விலை,
விவசாயிகளால் சமாளிக்க முடியாத அளவு தொடர்ந்து உயர்ந்து கொண்டு வருகிறது.தற்போது சில்லரை விலையில் தவிடு, கிலோ, 5 ரூபாய்க்கும் (ஆறு மாதத்துக்கு முன் கிலோ, 2.50 ரூபாய்), கோதுமை பொட்டு, 12 ரூபாய்க்கும், கடலை பொட்டு, 6 ரூபாய்க்கும், இலை பொட்டு, 8 ரூபாய்க்கும், கடலை புண்ணாக்கு கிலோ, 34 ரூபாய்க்கும் விற்கப்பட்டு வருகிறது. அரசு இலவச கால்நடைகளை வழங்கினால் இதன் விலை மேலும் உயரும் என கால்நடை வளர்ப்போர் கூறுகின்றனர்.இவ்வாறு விலை கொடுத்து, கால்நடைகளுக்கு வழங்கினால் தான் பாலும் கூடுதலாக கிடைக்கும். ஆனால், பாலுக்கு கட்டுப்படியான விலையை அரசு வழங்கவில்லை. இப்பிரச்னைக்கு தீர்வு காண, கால்நடைகளின் தீவனத்தை மானிய விலையில் அரசு வழங்க வேண்டும் என விவசாயிகள் கூறுகின்றனர்.பால் விலை குறைவு: இதுகுறித்து கால்நடைகள் வளர்க்கும் விவசாயி கொண்டஞ்சேரி பழனி கூறும் போது, ""மாட்டுத் தீவனங்களின் விலை உயர்வால் மாடுகளுக்குத் தேவையான தீவனங்களை தேவையான அளவு வழங்க முடியவில்லை. பல நூறு ரூபாய் செலவு செய்து தீவனத்தை மாடுகளுக்கு வழங்கினாலும், பாலின் விலை மிகவும் குறைவாக உள்ளது,'' என்றார்.தினசரி தேவை: கால்நடை மருத்துவர் ஒருவர் கூறும் போது, ""ஒரு லிட்டர் பால் உற்பத்திக்கு, 400 கிராம் தீவனம் வீதம், 10 லிட்டர் பால் உற்பத்தி செய்ய, 4 கிலோ

தீவனம் கொடுக்க வேண்டும். மாட்டின் உடல் பராமரிப்புக்காக, 2 கிலோ தீவனம் தினமும் கொடுக்க வேண்டும்," என்றார்.வரவுக்கும், செலவுக்கும்: பால் உற்பத்தியாளர் சங்க பொறுப்பாளர் பேரம்பாக்கம் கோபால் கூறும்போது, ""தமிழகத்தில் கலப்பின மாடுகள் அதிகம் உள்ளன. இதற்கு கலப்புத் தீவனம் தான் வழங்க வேண்டும். தீவனத்தை குறைத்தால், பாலின் அளவு குறைந்துவிடும். தீவனங்களின் விலை உயர்வால் எங்களுக்கு கிடைக்கும் பாலின் விலையை வைத்து கணக்கிட்டால் வரவுக்கும், செலவுக்கும் சரியாகி விடுகிறது. பல சமயங்களில் நஷ்டமும் ஏற்படுகிறது," என்றார்.எனவே, கால்நடை வளர்ப்போர் நலன் கருதி, ஆடு, மாடுகளை அரசு இலவசமாக வழங்க உள்ள நிலையில் கால்நடை தீவனங்களை மானிய விலையில் வழங்க அரசு முன்வர வேண்டும்.என்.ஆனந்தன்.

**ஏலக்காய் விலை குறைவை தடுக்க ஸ்பைசஸ் வாரியம் தலையிட கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,00:23 IST

கம்பம் : ஏலக்காய் விலை குறைந்து வருவதை தடுக்க ஸ்பைசஸ் வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஏல விவசாயிகள் சார்பில், ஸ்பைசஸ் வாரிய சேர்மன் ஜெயதிலக்கிடம் நேரில் வலியுறுத்தினர்.இடுக்கி மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் பரப்பில் ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த சீசனில் நல்ல மகசூல் கிடைக்கும் நிலை உள்ளது. ஆனால் சமீபத்தில் பெய்த மழையால் அழுகல் ஏற்பட்டு, மகசூல் பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது. இந்நிலையில் விலை கிலோவிற்கு ரூ. 600 க்கும் குறைவாக கிடைப்பதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். கம்பம் கேரள கார்டமம் குரோயர்ஸ் யூனியன், போடி கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன், வண்டன்மேடு கார்டமம் குரோயர்ஸ் அசோசியேசன் ஆகிய மூன்று ஏல விவசாய சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் குழு ஸ்பைசஸ் வாரிய சேர்மன் ஜெயதிலக்கை சந்தித்தது.ஸ்பைசஸ் வாரியத்தில் உள்ள கார்டமம் டெவலப்மெண்ட் பண்டிலிருந்து, ஆரம்பிக்கப்பட்டு, செயல்படாமல் உள்ள ஆக்ஷன் கம்பெனியை செயல்படுத்த ஸ்பைசஸ் வாரியம் முன்வர வேண்டும். ஒரு கிலோ ஏலக்காய் உற்பத்திக்கு ரூ. 600 வரை செலவாகிறது. ஆனால் விலை கிலோவிற்கு ரூ. 600 க்கு கீழ் கிடைத்தால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். எனவே ஸ்பைசஸ் வாரியம் ஏல விவசாயிகளிடமிருந்து காய் கொள்முதல் செய்ய, செயல்படாமல் உள்ள ஆக்ஷன் கம்பெனியை செயல்படுத்த முன்வர வேண்டும் என்று வலியுறுத்தினர்

**பெரியகுளம் பகுதியில் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,00:22 IST

பெரியகுளம் : பெரியகுளம் பகுதியில் தென்னை நார்கழிவை, இயற்கை சுழற்சி மூலம் பயனுள்ள உரமாக பயன்படுத்த விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.பெரியகுளம் மற்றும் ஒன்றியப் பகுதிகளில் ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக தென்னை சாகுபடி செய்யபட்டுள்ளது.
தேங்காயிலிருந்து எண்ணெய், மட்டையிலிருந்து கயிறு,தென்னங்கீற்று உட்பட தென்னையின் அனைத்து பாகங்களும் உபயோகமாகிறது. பெரியகுளம், கள்ளிப்பட்டி, கைலாசபட்டி பகுதியில் மட்டையிலிருந்து கயிறு தயாரிக்கப்படுகிறது.மீதமாகும் நார் கழிவுகளை வீணாக்குகின்றனர். தீயிட்டு எரிப்பதால் சுற்றுச் சூழல் மாசுபடுகிறது.பெரியகுளம் பகுதியில் விவசாயிகள் சிலர் வீணாகும் நார் கழிவுகளை இயற்கை உரமாக பயன்படுத்தவும், மண்ணின் நீர்பிடிப்பு தன்மையை அதிகரிக்கவும் செய்கின்றனர். ஒரு ஹெக்டேர் பரப்பளவில் உள்ள தென்னையில் இருந்து,1,500 மட்டைகள் வரை கிடைக்கிறது. இவற்றிலிருந்து ஒரு டன் நார்கழிவுகள் கிடைக்கும். இவற்றில் சிப்பிக்காளான்களை பயன்படுத்தி சத்துமிக்க இயற்கை உரம் தயாரிக்கலாம், என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**அரவையில் முருங்கை பதப்படுத்தும் ஆலை: அரசு ஊழியர் சங்கம் தீர்மானம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,01:32 IST

கரூர்: "அரவக்குறிச்சியில் முருங்கக்காய் பதப்படும் ஆலை அமைக்க வேண்டும்' என்று, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வட்ட மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க அரவக்குறிச்சி வட்ட மாநாடு வட்ட தலைவர் தாமோதரன் தலைமையில் அரவக்குறிச்சியில் நடந்தது. கூட்டத்தில் தமிழக அரசில் உள்ள இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட காலி பணியிடங்களை தாமதமின்றி உடனே நிரப்புதல், அரசு ஊழியர்கள் அனுபவித்து வரும் ஓய்வூதியத்தை முற்றிலும் முடக்கும் விதமாக புதிய பென்சன் திட்டத்தை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதை கைவிட்டு, ஏற்கனவே இருந்து வரும் ஓய்வூதிய திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துதல், அரசு ஊழியர்களின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தை தனியாரிடம் கொடுக்காமல் அரசே ஏற்று நடத்துதல், கடந்த ஆட்சியில் அமுல்படுத்தப்பட்ட ஊதியக்குழு திருத்தத்தில் ஏற்பட்டுள்ள அனைத்து முரண்பாடுகளையும் நீக்குவதற்கு சங்க நிர்வாகிகளை அழைத்து பேசுதல், சாலைப்பணியாளர்களின் 41 மாத போ ராட்ட காலத்தை ஓய்வூதியத்துக்கு கணக்கில் எடுத்து கொள்ளுதல், அரவக்குறிச்சியில் முரு ங்கைக்காய் பதப்படுத்தும் ஆØ ல அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிØவேற்றப்பட்டன.
மாநாட்டில், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் சாமுவேல் சுந்தரபாண்டியன், வட்ட

செயலாளர் டல்லஸ், பொருளாளர் அக்பர், துணைத்தலைவர்கள் பாஸ்கரன், தங்கராஜ், இணை செயலாளர்கள் மணிமாறன், கருப்பையா உள்பட பலர் பங்கேற்றனர்.

**காந்தமலர் விதைக்கு கூடுதல் விலை : வேளாண் துறை அமைச்சரிடம் மனு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,01:32 IST

கரூர்: காந்தமலர் விதைக்கு கூடுதல் விலை உள்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனு கரூர் வந்த வேளாண்துறை அமைச்சரிடம் வழங்கப்பட்டது. மாவட்ட தேசிய விவசாயிகள் விழிப்புணர்வு இயக்க மா வட்ட பொதுச்செயலாளர் பழனிசாமி, செயலாளர் செல்வராஜ் ஆகியோர் மனுவை அளித்தனர்.
அந்த மனுவில் கூறியிருப்பதாவது: கரூர் மாவட்டத்தில் காந்தமலர் அதிகளவில் பயிரிடப்பட்டது. இந்த நிலையில் காந்தமலர் ஒரு கிலோ விதை 3,000 ரூபாயில் இருந்து 700 ரூபாயாக குறைந்து விட்டது. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுவதை தடுக்க, காந்த மலர் விதையின் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மாவட்டத்தில் உள்ள தாலுகா அலுவலகங்களில் உள்ள கம்ப்யூட்டரில் ஏராளமான குறைபாடுகள் உள்ளது. இதனால் பட்டாவில் பெயர், எண் உள்ளிட்ட விபரங்கள் மாறி, மாறி உள்ளது.
இதனால் விவசாயிகள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். கம்ப்யூட்டரில் உள்ள குறைபாடுகளை நீக்க வேண்டும். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் போதிய கடன் வழங்க வேண்டும். மேலும் கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

**வேளாண் உற்பத்தியை அதிகரித்தால் கடன் : கலெக்டர் உறுதியளிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,02:05 IST

புதுக்கோட்டை: புதுக்கோட் டை மாவட்டத்தில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க முன்வரும் விவசாயிகள், விவசாயக் குழுக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்க வங்கிகள் தயாராக உள்ளது என கலெக்டர் உறுதியளித்துள்ளார்.
புதுக்கோட்டையில் நடந்த விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டத்துக்கு தலைமை வகித்து கலெக்டர் மகேஸ்வரி பேசியதாவது: புதுக்கோட்டை மாவட்டம் முழுக்க முழுக்க விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ளதால் பயிர் சாகுபடியின் மூலம் உணவு தானியங்களின் உற்பத்தி மற்றும் வேளாண் சார்ந்த தொழில்கள் மூலமான உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள்

துவக்கப்பட்டுள்ளது. இதற்கு மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்க வங்கிகளும் தயாராக உள்ளது.

குறிப்பாக, 50 மெ.டன் முதல் 10 ஆயிரம் மெ.டன் வரை கொள்ளளவு கொண்ட ஊரக கிடங்குகள் அமைக்க முன்வருபவர்களுக்கு குறைந்தபட்சம் 28 லட்சம் முதல் அதிகபட்சம் 62 லட்சம் ரூபாய் வரை வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படும். உலர்களம், இடுபொருள் அங்காடி, கொள்முதல் மையம், குளிர்பதன அறை, பால் கொள்முதல் நிலையம், கால்நடை தீவனம் உற்பத்தி செய்தல், கால்நடை விற்பனை மையம் அØ மத்தல், மீன்பிடி வலை தயாரித்தல், மீன் ஏலமிட வசதியாக தள ம் அமைத்தல், உலர் மீன் தயார் செய்வதற்கான இயந்திரங்கள் வாங்க 50 லட்சம் ரூபாய் வரை கடனுதவி வழங்கப்படும்.

உயிரி உரம் தயாரிக்க ரூ.20 லட்சம், மண்புழு உரம் தயாரிக்க ரூ.1.50 லட்சம் கடன் வழங்கப்படும். கறவை மாடுகள்(கலப்பினம்) வாங்கவும், பண்ணை அமைக்கவும் ஐந்து லட்ச ரூபாய் வரை கடனுதவி வழங்கப்படும்.

பால் கறக்கும் இயந்திரங்கள் வாங்கவும், பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கவும், பால் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான மையம் மற்றும் வாகனங்கள் வாங்க ரூ.30 லட்சம் வரை கடனுதவி வழங்கப்படும்.

பால் பொருட்கள் விற்பனை நிலையம் அமைக்க ரூ.56 ஆயிரம், கால்நடை மருத்துவ பணிமனை அமைக்க ரூ.2.40 லட்சம், கோழிப்பண்ணை அமைக்க ஒரு லட்சத்து 36 ஆயிரம், பன்றி வளர்க்க ஆறு லட்சம், பன்றி வளர்ப்பு பண்ணை அமைக்க ரூ.76 லட்சம், இறைச்சி விற்பனை நிலையங்கள் அமைக்க ரூ.10 லட்சம் வரை கடனுதவி வழங்கப்படும். இதற்கு விவசாயிகள், விவசாயக்குழுக்கள், தொண்டு நிறுவனத்தினர் மற்றும் தனியார் நிறுவனத்தினர் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயனடையலாம்.

உழவர் மன்றம் அமைக்க முன்வருபவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வேளாண் துறையின் மூலம் செய்துதரப்படும். மா, பலா, சப்போட்டா, நெல்லி போன்ற தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்வதன் மூலம் வருமானத்தை பெருக்கிக்கொள்ள வாய்ப்புகள் உள்ளது. இவற்றை அதிகளவு சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வரவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில், டி.ஆர்.ஓ., ஜீவகனி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ராதா, வேளாண் இணை இயக்குனர் தங்கவேலு, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்

பழனிவேலு, தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் லெட்சுமணன் உட்பட அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**வேளாண் பொருட்குழு துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,00:54 IST

சிதம்பரம் : காட்டுமன்னார்கோவில், குமராட்சியில் வேளாண் பொருட்குழு துவக்கப்பட்டுள்ளது. வேளாண் வணிகத்துறை சார்பில் பொருட் குழுக்கள் முருங்கை மற்றும் உளுந்து பயிருக்காக காட்டுமன்னார்கோவில் மற்றும் குமராட்சியில் வேளாண் பொருட்குழு துவக்கப்பட்டு விவ சாயிகளுக்கு விவசாய உற்பத்தி பெருக்க ஆலோசனைகள் வழங்கப்பட் டது. வேளாண் துணை இயக்குனர் தனவேல் துவக்கி வைத்தார். கூட்டத்தில், பொருட்குழு செயல்பாடுகள், நோக்கம் மற்றும் நன்மைகள் குறித்து வேளாண் அலுவலர் சித்ரா விளக்கினார். அறுவடை பின் நேர்த்தி முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

**மாணவர்களுக்கு வேளாண் பயிற்சித் திட்டம் தொடக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,00:48 IST

புவனகிரி : புவனகிரி அருகே ஆதிவராக நத்தத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் துறை மாணவர்களுக்கு வேளாண் பயிற்சித் திட்டம் தொடக்க விழா நடந்தது. பேரூராட்சித் தலைவர் அஞ்சலைதேவி மாயவன் தலைமை தாங்கினார். வார்டு கவுன்சிலர்கள் பழனியப்பன், வாசுதேவன் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியை உமாராணி வரவேற்றார். நிகழ்ச்சியில் கடந்த ஆண்டு, முதல் மூன்று இடங்களைப் பிடித்த பள்ளி மாணவர்களை பாராட்டி வேளாண் புல மாணவர்கள் பரிசு வழங்கினர். மேலும் ஆதிவராக நத்தம் ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தங்கியுள்ள மாணவர்கள் இரட்டைக்குளம், வண்டுராயன்பட்டு, உடையூர், புவனகிரி ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகளிடம் தங்கியிருந்து வேளாண்மை வளர்ச்சி குறித்து விளக்கி வருகின்றனர்.

இதுபோன்று அண்ணாமலைப் பல்கலைக் கழக வேளாண் துறை இறுதியாண்டு மாணவர்கள் பல்வேறு குழுக்களாக பிரிந்து சிதம்பரம் வட்டத்திற்குட்பட்ட கிராமப் பகுதிகளில் வேளாண் பயிற்சி திட்ட முகாம்களை நடத்தி வருகின்றனர்.

**மா அடர் நடவு முறை சாகுபடி உதவி இயக்குனர் பார்வை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,00:33 IST

விழுப்புரம் : விக்கிரவாண்டி ஒன்றியம் ரெட்டிக்குப்பம் கிராமத்தில் சொட்டு நீர் பாசனத்தில் மா அடர்நடவு முறையில் சாகுபடியை உதவி இயக்குனர் பார்வையிட்டார். விக்கிரவாண்டி அடுத்த ரெட்டிக்குப்பம் கிராமத்தை சேர்ந்தவர் பிரகாஷ். இவர் தனது வயலில் 2011-12 ம் ஆண்டு தேசிய தோட்டக்கலை திட்டத்தின் கீழ் தனது 7.5 ஏக்கர் வயலில் மா கன்றுகளை அடர் நடவு முறையில் நடவு செய்தார். நடவு பணியினை தோட்டக்கலைத்துறையின் உதவி இயக்குனர் டாக்டர் வீராசாமி நேரில் பார்வையிட்டு மா கன்றுகளை வழங்கி ஆலோசனை கூறினார். நடவு பணியை விவசாயிகள் செ.புதூர் துரைபாபு, சின்னதச்சூர் கணேஷ், உதவி வேளாண்மை அதிகாரிகள் தட்சிணாமூர்த்தி, மாரியப்பன், கலைச்செல்வி பார்வையிட்டனர்.

**உணவு உற்பத்தி குழுவில் புதியவர்களுக்கு வாய்ப்பு :விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,00:27 IST

விழுப்புரம் : விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் கலெக்டர் மணிமேகலை தலைமையில் விழுப்புரத்தில் நடந்தது. கலெக்டர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் டி.ஆர்.ஓ.,வெங்கடாஜலம், மண்டல இணை பதிவாளர் பாலகிருஷ்ணன், மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் நவ்ஷாத், சர்க்கரை ஆலை தனி அலுவலர் சிவமலர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) சக்கரவர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர். மாவட்டத்தில் உரத் தட்டுப்பாட்டை நீக்க வேண்டும். உளுந்தூர்பேட்டையில் இருந்து சேந்தநாடு வழியாக பண்ருட்டிக்கு அரசு பஸ் இயக்க வேண்டும். தார் பாய் விலை அதிகமாக உள்ளதால் பிளாஸ்டிக் ஷீட் விற்க வேண்டும். விக்கிரவாண்டி ஒன்றியம் வி.சாலை பகுதியில் குடிநீர் பற்றாக்குறை உள் ளது. கரும்பு விவசாயிகள் குறை கேட்பு கூட்டத்தில் தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர் விவசாயிகளிடம் குறைகளை கேட்க வேண்டும். ஏரி வாய்க்கால்கள் சீரமைக்கப்பட வேண்டும். கோலியனூர் வாய்க்கால் சீரமைக்க வேண்டும். உணவு உற்பத்தி குழு வில் புதியவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். தியாகதுருகம் பகுதியில் தேங்கி நிற்கும் கழிவு நீரை அகற்ற வேண்டும். ரெட்டணை - மண்டகபட்டு இடையே தொண்டியாற்றில் பாலம் கட்ட நிதி ஒதுக்கியும் பணி நடக்க வில்லை. மணலூர்பேட்டை மார்க்கெட் கமிட்டியில் சிமென்ட் தரை அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து விவசாயிகள் வலியுறுத்தினர்.

**பார்த்தீனிய செடி அழிப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,00:18 IST

செஞ்சி : வல்லத்தில் வேளாண்மைத்துறை மூலம் பார்த்தீனிய செடிகள் அழிப்பு முகாம் நடந்தது.ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை தலைமை தாங்கினார். ஊராட்சி தலைவர் ரத்தினம் முன்னிலை வகித்தார். வட்டார வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி வரவேற்றார். விழுப்புரம் வேளாண் அலுவலர் சரவணன் பார்த்தீனிய செடியின் விஷத்தன்மையும், இதனால் ஏற்படும் நோய்கள் குறித்தும் விளக்கினார்.உதவி அலுவலர் கண்ணன் செடி அழிப்பு செயல் விளக்கமளித்தார். உதவி வேளாண் அலுவலர்கள் மாணிக்கம், மணிவேல் மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.

**ஆத்தூரில் பருத்தி ஏலம் ரூ.26 லட்சம் வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,01:52 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில், 2,000 பருத்தி மூட்டைகள், 26 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த ஏலத்துக்கு, பெரம்பலூர், திருவண்ணாமலை, நைனார்பாளையம், கள்ளக்குறிச்சி, ஆத்தூர், தலைவாசல், தம்மம்பட்டி, கெங்கவல்லி ஆகிய பகுதியை சேர்ந்த விவசாயிகள், தங்கள் விளைவித்த பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.
ஏலத்தில், ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,000 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,169 ரூபாய்க்கும், டி.சி.ஹெச்., ரக பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,500 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,490 ரூபாய்க்கும், கொட்டு பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 1,000 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 2,500 ரூபாய்க்கும் விற்பனையானது. ஏலத்தில், 2,000 பருத்தி மூட்டைகள், 26 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**மேட்டூர் பகுதியில் தொடர்மழை சாகுபடியில் விவசாயிகள் தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,01:47 IST

மேட்டூர்: மேட்டூர் சுற்றுப்பகுதியில் கடந்த 20 நாட்களில், 204.2 மி.மீ., மழை பதிவாகியுள்ளதால், விவசாயிகள் சாகுபடி பணியில் தீவிரமாகியுள்ளனர். மேட்டூர் சுற்றுப்பகுதியில் கடந்த 20 நாட்களாக தொடர்ந்து மழை பெய்கிறது. கடந்த 6ம் தேதி 18.2 மி.மீ., 7ம் தேதி 23.4 மி.மீ., 9ம் தேதி 0.8 மி.மீ.,10ம் தேதி 14.6 மி.மீ., 11ம் தேதி 0.6 மி.மீ., 15ம் தேதி 11.8 மி.மீ., 16ம் தேதி 28.4

மி.மீ., 17ம் தேதி 4.2 மி.மீ., 18ம் தேதி 67.2 மி.மீ., 19ம் தேதி 9.8 மி.மீ., 21ம் தேதி 25.2 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. கடந்த 20 நாளில், மேட்டூர் பகுதியில் மட்டும் 204 மி.மீ., மழை பதிவாகியுள்ளது தொடர் மழையால், விவசாய கிணறுகளில் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது மேட்டூர், கொளத்தூர், மேச்சேரி பகுதி விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. விரைவில், வடகிழக்கு பருவமழை சீஸன் துவங்கும் என்பதால், விவசாயிகள் நெல் சாகுபடி பணிகளில் தீவிரமாகியுள்ளனர். ஏற்கனவே, சாகுபடி செய்து அறுவடை முடிவடையும் தருவாயில் பருத்தி காய்கள் வெடிக்காமல் இருப்பதால், ஏற்பட்ட நஷ்டம் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**மானிய விலையில் இடு பொருள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,01:23 IST

தர்மபுரி: விரைவுப்படுத்தப்பட்ட பயறு பெருக்குத் திட்டத்தின் கீழ் தர்மபுரி, கிருஷ்ணாபுரம் வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானிய விலையில் இடு பொருள்கள் வழங்கப்பட்டது. கூட்டத்தில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ராஜன் வேளாண்மையில் பயறு வகை பயிர்களின் முக்கியத்துவம் குறித்து பேசியதாவது: பயறு வகைகள் மனிதர்களுக்கு புரதச்சத்து அளிப்பதுடன் கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாகவும், பசுந்தாள் உரமாகவும் பயன்படுகிறது. பயறு வகை பயிர்களின் வேர்களில் காணப்படும் வேர் முடிச்சு வளிமண்டலத்திலுள்ள தழைச்சத்தை கிரகித்து மண்ணில் நிலைப்படுத்துவதால், மண் வளத்தை மேம்படுத்தும் திறனுள்ளதாக விளங்குகிறது.

பயறு வகை சாகுபடி பரப்பை அதிகரிக்க செய்ய சரியான ரகங்களை சரியான பருவத்தில் விவசாயிகள் தேர்வு செய்ய வேண்டும். சதுர மீட்டருக்கு, 33 செடிகள் என பயிர் எண்ணிக்கை பராமரிக்க வேண்டும். ஒருங்கிணைந்த உர நிர்வாகம் மற்றும் பயிர் பாதுகாப்பு செய்து சரியான சமயத்தில் இரண்டு சதவிகிதம் டி.ஏ.பி., இலைவழி கரைசலை தெளித்து களை நிர்வாகம் செய்ய வேண்டும்.

பயறு வகை சாகுபடியின் போது, நீர் நிர்வாகம் மற்றும் காலத்தே அறுவடை முறைகளை பின்பற்ற வேண்டும். பயறு வகை பயிர்களில் முக்கிய பயிராக விளங்கும் உளுந்து பயிரின் உற்பத்தினை அதிகரிக்க தர்மபுரி தாலுக்காவிலுள்ள தர்மபுரி மற்றும் கிருஷ்ணாபுரம் வேளாண்மை விரிவாக்க மையங்களில் உளுந்து விதை உயிர் உரங்கள், நூண்ணுட்ட சத்துக்கள், உரங்கள் மற்றும் பூச்சி கொல்லிகளை கட்டுப்படுத்தும் மருந்துகள் ஆகிய இடு பொருட்கள் விரைவுப்படுத்தப்பட்டு மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

தர்மபுரி எம்.எல்.ஏ., பாஸ்கர் விவசாயிகளுக்கு இடு பொருள்களை வழங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் முருகேசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**கருப்பட்டி விலை கிலோ ரூ.1 சரிவு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,01:35 IST

கோபிசெட்டிபாளையம்: தென்னை கருப்பட்டி கிலோவுக்கு ஒரு ரூபாய் வீழ்ச்சி அடைந்ததால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கோபி சுற்று வட்டாரத்தில் தென்னை மற்றும் பனை கருப்பட்டி அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. பனை கருப்பட்டி மற்றும் தென்னை கருப்பட்டி உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் சிறுவலூர் மற்றும் குன்னத்தூர் கூட்டுறவு கருப்பட்டி உற்பத்தியாளர் சங்கத்தில் விற்பனை செய்கின்றனர். பதநீர் இறக்கும் சீஸன் நிறைவந்து விட்டதால் பனை கருப்பட்டி உற்பத்தி நின்று விட்டது. தென்னை கருப்பட்டி வரத்து தொடர்ச்சியாக உள்ளது. சென்ற வாரம் தென்னை கருப்பட்டி 10 கிலோ 390 ரூபாய்க்கு விற்பனையானது. நடப்பு வாரம் தென்னை கருப்பட்டி 15 ஆயிரம் கிலோ வரத்தானது. 10 கிலோ கருப்பட்டி 380 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. மொத்தம் ஐந்து லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. தென்னை கருப்பட்டி விலை திடீரென வீழ்ச்சி அடைந்தால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**இயந்திரம் மூலம் டீ விற்பனை துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,01:19 IST

தர்மபுரி: மாற்று திறனாளிகள் நலத்துறை, ஊட்டி புளுமான்ஸ் நிறுவனம் சார்பில் புதிய இயந்திர முறையில் தேநீர் பானங்கள் விற்பனை செய்யும் நிலையத்தை கலெக்டர் லில்லி துவக்கி வைத்து பேசியதாவது: தர்மபுரி மாவட்த்தில் நான்கு இடங்களில் இந்த விற்பனை மையம் துவங்கப்படுகிறது. தற்போது, கலெக்டர் அலுவலகத்திலும், சுற்றுலா பயணிகள் அதிகம் வரும் ஒகேனக்கல், மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகிய இடங்களில் துவங்கப்படுகிறது. இந்த தேநீர் பான விற்பனை முழுக்க, முழுக்க மாற்று திறனாளிகள் கொண்டு இயக்கப்படுகிறது. மாற்று திறனாளிகள் மற்றவர்களுக்கு ஈடு இணையாக தொழில் செய்து வாழ்வில் எல்லா வளமும் பெற வேண்டும். இவ்வாறு பேசினார்.

திட்ட இயக்குனர் ரவிச்சந்திரன், மகளிர் திட்ட அலுவலர் சத்யபாலன், மாற்று திறனாளிகள் நல அலுவலர் இம்தியாஸ் அகமது, ஊட்டி புளுமான்ஸ் நிறுவன தலைமை நிர்வாக அலுவலர் அஜீத்குமார், உதவி திட்ட அலுவலர் ராஜகோபால் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**குச்சி கிழங்கு அறுவடை பணி தீவிரம் :விவசாயிகள் நேரடி விற்பனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2011,02:08 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் குச்சி கிழங்கு அறுவடை பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. விவசாயிகள் தங்கள் தோட்டத்துக்கு அருகே சாலையோரங்களில் கடை விரித்து கிழங்கு விற்பனையில் இறங்கியுள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் நெல், கரும்பு, மஞ்சளுக்கு அடுத்தப்படியாக இறவை பாசன பகுதிகளில் அதிக அளவில் குச்சி கிழங்கு பயிர் செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் கிழங்குகள் சேலம் சேகோ பேக்டரிக்கு அதிக அளவில் கொள்முதல் செய்யப்பட்டு செல்கிறது.

அதிக அளவில் விவசாயிகள் வீரிய ரக கிழங்குகளை பயிர் செய்து வருகின்றனர். ஒரு சில விவசாயிகள் மட்டும் நாட்டு ரக குச்சி கிழங்குகளை பயிர் செய்து விற்பனை செய்கின்றனர். தற்போது, பாலக்கோடு, தர்மபுரி தாலுகா பகுதியில் பயிர் செய்யப்பட்டிருந்த குச்சி கிழங்குகள் அறுவடை செய்யும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.
கடந்தாண்டை விட இந்தாண்டு போதிய சீதோஷண நிலை இருந்ததால், குச்சி கிழங்குகள் எதிர்பார்த்த அளவில் உற்பத்தி கிடைத்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சில்லறை வியாபாரிகள் குச்சி கிழங்குகளை விவசாய தோட்டங்களுக்கு சென்று கிலோ 13 ரூபாய் வரையில் கொள்முதல் செய்து நகரப்பகுதியில் தள்ளு வண்டிகளில் கிலோ 20 ரூபாய் வரையில் விற்பனை செய்கின்றனர்.

விவசாயிகளை விட வியாபாரிகளுக்கு அதிக லாபம் கிடைத்து வரும் நிலையில், பல விவசாயிகள் தற்போது, தங்கள் தோட்டங்களில் அறுவடை செய்யும் கிழங்குகளை சாலையோரங்களில் கடை விரித்து விற்பனன செய்ய துவங்கி விட்டனர். சாலையோரங்களில் விற்பனை செய்யப்படுவதால், அந்த வழியாக செல்வோர் குச்சி கிழங்குகளை வாங்கி செல்கின்றனர். ஒரு கிலோ கிழங்கு 15 ரூபாய்க்கு விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். விற்பனைக்கு ஏற்றவாறு கிழங்குகளை அறுவடை செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

**பனை, தென்னை மரங்களை பாதுகாக்க தமிழ்நாடு கள் இயக்கம் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2011,23:37 IST

திருப்பூர் : "வேகமாக அழிந்து வரும் பனை, தென்னை மரங்களை காக்க, கன்னியாகுமரியில் இருந்து விழிப்புணர்வு பிரசார பேரணி நடத்துவது,' என, தமிழ்நாடுகள் இயக்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தமிழ்நாடு கள் இயக்க ஆலோசனை கூட்டம், மாநில அமைப்பாளர் கதிரேசன் தலைமையில் நடந்தது. கள ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி, தமிழ் தேசிய கட்சி அமைப்பாளர் சிப்பிமுத்து, கள் இயக்க அமைப்பாளர்கள் மணி, வேலுசாமிஉள்ளிட்டோர் பங்கேற்றனர்.கள் மது அல்ல; உணவின் ஒரு பகுதி என்ற இந்திய அரசியலமைப்பு சட்டம், உச்சநீதிமன்ற தீர்ப்பு, மருத்துவ ஆராய்ச்சிக்கழகம் கூறுகின்றன. எனவே, கள் மீதான ஆளுமையை கைவிட்டு, தடையை நீக்க வேண்டும். கள்ளை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றவும், பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னிய செலாவணி ஈட்டும் குழு அமைத்து ஆய்வு செய்ய வேண்டும். தமிழகத்தில் சர்க்கரை ஆலைக்கழிவான மொலாசஸ் மூலப்பொருளாக கொண்டு, இந்திய தயாரிப்பு அன்னிய மதுபானங்கள் விற்கப்படுகின்றன. ஆல்கஹால் சதவீதம் அடிப்படையில் ரகம் பிரிக்கின்றனர். வெளிநாட்டில், பார்லியிலிருந்து பீர், பழச்சாறுகளிலிருந்து நேரடியாக ஒயினும், காய்ச்சி வடித்து பிராந்தி, தானியங்களிலிருந்து விஸ்கி, கரும்பு சாற்றிலிருந்து ரம் தயாரிக்கப்படுகிறது. எனவே, "டாஸ்மாக்' மதுக்களின் தரம் உயர்த்தி, உண்மையான மூலப்பொருட்களில் தயாரிப்பதோடு, மொலாசஸ் வாகன எரிபொருளான எத்தனால் தயாரிப்புக்கு திருப்பி விடப்பட வேண்டும்.தமிழகத்தில் கள்ளுக்கான தடை 24 ஆண்டுகளாக உள்ளது. தமிழக முதல்வர் தேர்தல் பிரசாரத்தின்போது பொள்ளாச்சி பொதுக்கூட்டத்தில் கள்ளுக்கான தடை நீக்கப்படும் என அறிவித்தார். தேர்தல் அறிவிப்பில் இலவசங்கள் கொடுப்பதற்கு நிதி தேவை; ஆனால், கள்ளுக்கான தடையை நீக்கினால் வருவாய் அதிகரிக்கும். எனவே, அறிவித்தபடி கள்ளுக்கான தடையை நீக்க வேண்டும்.வேகமாக அழிந்து வரும் பனை, தென்னை மரங்களை காக்க கன்னியாகுமரியில் இருந்து விழிப்புணர்வு பிரசார பேரணி நடத்துவது; கள்ளுக்கான தடை நீக்குவது குறித்து ஆய்வு செய்ய கடந்த அரசால் நியமிக்கப்பட்ட நீதிபதி சிவசுப்ரமணியம் குழு அறிக்கையை வெளியிடுவதோடு; சட்டசபை கூட்டத்தொடரிலேயே கள்ளுக்கான தடையை நீக்குவதற்கான உத்தரவை வெளியிட வேண்டும், என, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**"நபார்டு' வங்கி துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2011,23:37 IST

திருப்பூர் : "நபார்டு' வங்கியின் மண்டல வளர்ச்சி அலுவலகம், திருப்பூரில் துவக்கப்பட்டுள்ளது.வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி என்ற"நபார்டு' வங்கியின் திருப்பூர் மண்டல வளர்ச்சி அலுவலகம் புதிதாக துவக்கப்பட்டுள்ளது. இதன் துவக்க விழா, கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கலெக்டர் மதிவாணன் துவக்கி வைத்தார்.தமிழக மண்டல பொது

மேலாளர் ரமேஷ் டென்கில் பேசியதாவது:ஊரகப்பகுதிகளில் சாலை மேம்பாடு, பாலங்கள், நீர்ப்பாசன திட்டங்கள், குடிநீர் திட்டங்கள்,பள்ளிகள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்கள் அமைக்கும் பணிக்கு மாநில அரசுக்கு இவ்வங்கி கடன் வழங்கும். கூட்டுறவு கடன் சங்கங்கள் வளர்ச்சிக்கும் கடன் வழங்கப்படும். விவசாயிகளை ஒருங்கிணைத்து, விவசாய தொழில் நுட்பங்கள், கடன் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். தொண்டு நிறுவனங்களுக்கு உதவும் வகையில், ஊரகப் பகுதிகளில் சுய உதவிக்குழுக்கள் அமைத்தல், திறன் வளர்ப்பு பயிற்சி நடத்துதல் உள்ளிட்ட பணிகளையும் இவ்வங்கி செயல்படுத்தும், என்றார்.டி.ஆர்.ஓ., கஜலட்சுமி, திட்ட அலுவலர் ரேணுகா தேவி, முன்னோடி வங்கி மேலாளர் ராஜகோபால் முன்னிலை வகித்தனர். நபார்டு வங்கி திருப்பூர் மண்டல உதவி பொது மேலாளர் ஸ்ரீராம் வரவேற்றார். ஈரோடு உதவி பொது மேலாளர் சந்தானம் நன்றி கூறினார்.

**நேரடி நெல் கொள்முதல் நிலையம் பாரதிய கிசான் கலெக்டரிடம் மனு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2011,02:12 IST

திருச்சி: திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடந்தது. கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ, விவசாயத்துறை அதிகாரிகள், பல்வேறு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர். பாரதிய கிசான் சங்க மாநில பொதுச்செயலாளர் அய்யாக்கண்ணு கலெக்டரிடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இல்லாததால், 60 கிலோ நெல் 650 ரூபா ய்க்கு விற்பதற்கு பதிலாக, 500 ரூபாய்க்கு விற்பனையாகிறது. செப்டம்பர் மாதத்தில் திருச்சி மாவட்டத்தில் குறுவை நெல் அறுவடை துவங்கிவிடும். என வே, வரும் செப்டம்பர் 15ம் தே திக்கு பிறகு திருச்சி மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விவசாய விளை பொருட்களுக்கு லாபகரமான விலை கொ டுக்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய, மாநில அரசின் கவனத்துக்கு கலெக்டர் அனுப்ப வேண்டும். நிலத்தை அளக்க கொடுக்கும் மனுக்கள் மீது 15 நாளில் நடவடிக்கை எடுக்க கலெக்டர் உத்தரவிடவேண்டும். ஏரி, குளங்களில் உள்ள வண்டல் மண்ணை மிஷின் மூலமாக தூர் அகற்றுவதை, விவசாயிகள் எடுத்து சென்று வயலுக்கு பயன்படுத்த அனுமதிக்கவேண்டும். எல்லா விவசாய பயிர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கவேண்டும். ஆள்மாறாட்டம் செய்தும், பட்டாவை மாற்றியும் நில அபகரிப்பில் ஈடுபட்டவர்கள் மீது கிரிமினல் வழக்கு போட கலெக்டர் உத்தரவிட வேண்டும். இவ்வாறு பாரதிய கிசான் சங்கம் கொடுத்த மனுவில் கூறப்பட்டிருந்தது. "மனுமீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கலெக்டர் ஜெயஸ்ரீ உறுதியளித்தார்.

**பயிர் சாகுபடியை அதிகரிக்க தமிழக அரசு முடிவு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2011,02:19 IST

சென்னை : "தமிழகத்தில் பயிர் சாகுபடியை அதிகரிக்க, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என தமிழக அரசு அறிவித்துள்ளது.தமிழக அரசு சட்டசபையில் தாக்கல் செய்த கொள்கை விளக்க குறிப்பில் கூறியிருப்பதாவது:தமிழகத்தில், ஆண்டுதோறும் ஜூன் 12ம் தேதி பாசனத்திற்காக திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை, ஜூலை 28ம் தேதி, தாமதமாக திறக்கப்பட்டதால், குறுவை நெல் சாகுபடிப் பரப்பில் குறைவு காணப்பட்டது. நடப்பாண்டில், மேட்டூர் அணையில் தண்ணீர் போதுமான அளவு இருந்ததால், முதன்முறையாக ஜூன் 6ம் தேதி அணையினை திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது.இதையடுத்து, முன்கூட்டியே குறுவை சாகுபடியை மேற்கொள்ள முடியும் என்பதாலும், அறுவடை சமயத்தில் நெற்பயிருக்கு வடகிழக்கு பருவ மழையினால், அதிக பாதிப்பு ஏற்படாது என்பதாலும், உரிய காலத்தில் குறுவைப் பயிர் அறுவடை செய்யப்பட்டு விடும். பின், அதே பரப்பில் மீண்டும் சாகுபடியை மேற்கொள்ள முடியும். இதைக் கருத்தில் கொண்டு, அரசு எடுத்த முடிவு, டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.கடந்த 2010 நவம்பர் மூன்று, நான்காம் வாரங்களில், பெய்த கனமழையினால், 26 மாவட்டங்களில், பயிர்கள் நீரில் மூழ்கின. குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலங்களால், தமிழகத்தின் கடலோரப் பகுதிகள் அதிகளவு பாதிப்புக்குள்ளாகின.இதனால், பல மாவட்டங்கள் குறிப்பாக, காவிரி பாசனப் பகுதியை உள்ளடக்கிய மாவட்டங்களில், ஆகஸ்டு மாதத்தில் சாகுபடி செய்ய வேண்டிய சம்பா நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டதோடு, 50 சதவீதத்திற்கும் அதிகமான உற்பத்தி இழப்பு ஏற்பட்டது.சென்ற ஆண்டு, 60.50 லட்சம் எக்டேர், பயிர் சாகுபடி மற்றும் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 46.40 லட்சம் எக்டேர் மட்டுமே உற்பத்தி செய்ய முடிந்தது. நடப்பாண்டில், 53.50 லட்சம் எக்டேர் பயிர் சாகுபடி மற்றும் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.இலக்கை அடைவதற்கானவழிகள்: ஐந்து ஆண்டுகளில், 75 லட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாகவும், 50 சதவீதத்திற்கு அதிகமாக உற்பத்தித் திறனை உயர்த்தவும், பயிர் செய்யும் திறனை அதிகரிக்கவும்திட்டமிடப்பட்டுள்ளது.மேலும், தரிசு நிலங்களை சாகுபடி நிலங்களாக மாற்றவும், அனைத்து வேளாண் பணிகளை விவசாயிகள் தெரிந்து கொள்ளவும், திட்டப்பயன்கள் வேளாண் விவசாயிகளை முழுமையாக சென்றடைவதை உறுதி செய்து கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.இதில், முதல் கட்டமாக வேளாண் உற்பத்தியில் நிலைத்தன்மை

அடைவதை உறுதி செய்வதற்கு, 2011-12, 2012-13 மற்றும் 2013 - 14ம் ஆண்டுகளுக்கான பண்ணை அளவிலான செயல் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

தகவலே இல்லாமல் இயங்கும் தலைமை தபால் துறை அலுவலகம்

சென்னை : நாடு முழுவதும், பல ஆண்டுகளாக செயல்பட்ட,"சான்று ஒப்புகை அத்தாட்சி' திட்டத்தை, எவ்வித அறிவிப்பின்றி நிறுத்திய, தபால் துறையின் நடவடிக்கைக்கு பொதுமக்களிடையே கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. மேலும், இத்திட்டம் கைவிடப்பட்டதற்கான தகவல்கள், தமிழக தலைமை தபால் துறை தலைவர் அலுவலகத்தில் இல்லாதது வேடிக்கையாக உள்ளது.உலகில் மிகப்பெரிய தபால் நிலையக் கட்டமைப்பை கொண்டிருக்கும் இந்திய தபால் துறை,"தபால் விநியோகம், தபால் அட்டை, அஞ்சல் தலை, மணி ஆர்டர், இன்லேண்ட் லெட்டர்' விற்பனை உள்ளிட்ட பாரம்பரிய பணிகளில் ஈடுபட்டு வருகிறது.ஏழை, எளிய மக்களுக்கு பயன்படும் வகையில்,"சான்று ஒப்புகை அத்தாட்சி' (க்ணஞ்னுணூ இனுணூtடினூடிஞ்ச்tனு ணிஜூ கணிண்tடிணஞ்) என்ற திட்டம், இந்திய தபால் துறை துவக்கப்பட்ட சில ஆண்டுகளிலேயே நடைமுறைக்கு வந்தது. கடந்த 150 ஆண்டுகளாக, நடைமுறையில் இருந்த இத்திட்டம் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது.நவீன மயமாக்கல் மற்றும் லாப நோக்கு என்ற பெயரில், தபால் துறை மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு பரவலான எதிர்ப்பு நாடு முழுவதும் எழுந்துள்ளது. இந்நிலையில், எவ்வித முன்னறிவிப் பின்றி, "சான்று ஒப்புகை அத்தாட்சி' என்ற திட்டத்திற்கு மூடு விழா நடத்திய, தபால் துறையின் நடவடிக்கைக்கு, தபால் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.இத்திட்டம் நிறுத்தப்பட்டதற்கான காரணம் மற்றும் விவரங்களை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், தமிழக வட்ட தலைமை தபால் துறை அலுவலகத்தில் கேட்டபோது, இதற்கான தகவல்கள் இல்லை எனத் தெரிவித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.இதுகுறித்து, மாவட்ட நுகர்வோர் தகவல் மைய ஒருங்கிணைப்பாளர் சடகோபன் கூறியதாவது:என் அலுவல் சார்ந்த அனைத்து கடிதங்களையும்,"சான்று ஒப்புகை அத்தாட்சி' மூலம் அனுப்புவது வழக்கம். சமீபத்தில், கடிதங்களை அனுப்ப தபால் நிலையம் சென்றேன். அப்போது, இனி இந்த முறையில் கடிதங்களை அனுப்ப முடியாது. இத்திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது என்று தபால் ஊழியர்கள் கூறினர். "எப்போது, எதற்காக' சான்று ஒப்புகை அத்தாட்சி திட்டம் நிறுத்தப்பட்டது குறித்து ஊழியர்களுக்கே தகவல் தெரியவில்லை.கடந்த ஜூலை மாதம், தமிழக வட்ட தலைமை தபால் துறை தலைவர் அலுவலகத்தில், இத்திட்டம் குறித்த தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டேன். அதற்கு கிடைத்த பதில்கள் அதிர்ச்சியாக உள்ளன.திட்டம் துவக்கப்பட்ட ஆண்டு, எதற்காக கைவிடப்பட்டது, இத்திட்டத்தால், கடந்த 10 ஆண்டுகளில் பயனடைந்தவர்கள் எண்ணிக்கை உள்ளிட்ட தகவல்கள் இல்லை என தமிழக வட்ட தலைமை தபால் துறை அலுவலகம் பதிலளித்தது ஏமாற்றம் அளிக்கிறது. இது தபால் துறையின் பொறுப்பற்ற தன்மையை காட்டுகிறது.சேவை புரியும் எந்த ஒரு அரசு நிறுவனமும், மக்களுக்காக

ஒரு திட்டத்தை துவக்கும் முன் அல்லது திட்டத்தை நிறுத்தும் முன், அதற்கான அறிவிப்பை செய்தித்தாள் வாயிலாக பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும். ஆனால், இத்திட்டத்தை நிறுத்தியதை தெரியப்படுத்தாமல், அரசிதழில் வெளியான ஆணை எண்ணை கையால் எழுதி தெரிவித்தது ஏன் என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.ஒரு காலத்தில், சிறப்பான நிர்வாகத்தால் அனைவரின் பாராட்டையும் பெற்ற தபால் துறையின், தமிழக வட்ட தலைமை தபால் துறை அலுவலகத்தில் ஒருதிட்டம் குறித்த அடிப்படைதகவலே இல்லாதது வேதனையும், அதிர்ச்சியையும் அளிக்கிறது.பா.சேதுராமன்

**நெல்லுக்கு கட்டுப்படியான விலை கிடைக்குமா?**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2011,00:40 IST

மதுரை : நெல் சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு 26 ஆயிரத்து 626 ரூபாய் செலவாகிறது. மத்திய அரசுக்கு பரிந்துரைத்தபடி குவிண்டாலுக்கு 1650 ரூபாய் வழங்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். விவசாயம் மானிடர்களுக்கு உணவளிக்கும் தொழில் மட்டுமல்ல; 50 ஆண்டுகளுக்கு முன், விவசாயம் மூலம் பெற்ற உபரி வருமானம், தொழில் துறையில் முதலீடு செய்யப்பட்டது. உதாரணம் கோவை. ஆனால், இன்று அந்நிலை இல்லை. இந்திய பொருளாதாரம் 70 சதவீதம்பேர் செய்யும் விவசாயத்தை சார்ந்தது. வளர்ச்சியடைந்த நாடு என சொல்ல வேண்டுமானால், தேசிய வருவாய் அதிகரிக்க வேண்டும். ஆனால், 70 சதவீத விவசாயிகளின் வருவாய் குறைந்துவிட்டது. விவசாயிகள் நகரங்களை நோக்கி குடிபெயர்கின்றனர். அங்கு நெரிசல் அதிகரித்துள்ளது. இதனால், "உலகமயமாக்குதல் தளர்த்தப்பட்டு வரும் வியாபாரக் கட்டுப்பாடு' என்னும் கொள்கைக்கு ஊக்கம் அளிக்கின்றனர். 1995 முதல் 2010 வரை 2 லட்சத்து 56 ஆயிரத்து 949 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டதாக, மத்திய அரசு புள்ளி விபரம் தெரிவிக்கிறது. உற்பத்தி பொருளுக்கு லாபகரமான விலை நிர்ணயம் செய்யாதது தற்கொலைக்கு ஒரு காரணம். விதை, உரம், பூச்சிமருந்துகளின் விலை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. ஆனால், விளைவிக்கும் நெல்லுக்கு லாபகரமான விலை இல்லை; கடனை திருப்பிச் செலுத்த முடியவில்லை.இந்தியாவின் மொத்த நெல் உற்பத்தி 85 முதல் 90 மில்லியன் டன். மொத்த உற்பத்தியில் 25 சதவீதம் மட்டுமே இந்திய உணவுக் கழகம் (எப்.சி.ஐ.,) கொள்முதல் செய்தது. மீதி நெல்லை, வெளிச்சந்தையில் மிக குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். நெல் விலை பற்றி ஆராய அரியானா முதல்வர் பூபேந்தர் சிங் கோடா தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இக்குழு மத்திய அரசிடம் அளித்த அறிக்கையில், உற்பத்தி செலவு போக கூடுதலாக 50 சதவீதம் விலை நிர்ணயம் செய்ய பரிந்துரைத்தது. தேசிய விவசாயிகள் கமிஷன் தலைவர் எம்.எஸ்.சாமிநாதன் 2010 ல்

மத்திய அரசிடம் சமர்ப்பித்த அறிக்கையில், நெல் குவிண்டாலுக்கு 1650 ரூபாய் வழங்க பரிந்துரைத்தார். இருவரின் பரிந்துரையும், மத்திய அரசு குவிண்டாலுக்கு 1650 ரூபாய் வழங்க வேண்டும் என்பதே. ஆனால், 1050 ரூபாய் மட்டுமே மத்திய அரசு வழங்குகிறது. பாரதிய கிசான் சங்கம், நெல் உற்பத்தி செய்யும் மாவட்டங்களில் ஆய்வு செய்தது. விவசாயிகளிடம் பெறப்பட்ட விபரத்தின் படி, ஒரு ஏக்கரில் நெல் உற்பத்திக்கு 26 ஆயிரத்து 626 ரூபாய் செலவாகிறது. தஞ்சாவூரில் 27 ஆயிரத்து 416, திருச்சி 26 ஆயிரத்து 420, மதுரை 26 ஆயிரத்து 41, சராசரி 26 ஆயிரத்து 626 ரூபாய். ஒரு ஏக்கர் வருவாய் 24 ஆயிரத்து 150 ரூபாய். நிகர நஷ்டம் 2476 ரூபாய். பாரதிய கிசான் சங்க மாநில பொதுச் செயலாளர் பெருமாள் கூறுகையில்,""அ.தி.மு.க.,தேர்தல் அறிக்கையில் நெல், கரும்புக்கு கூடுதல் விலை நிர்ணயிக்க முயற்சிக்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா உறுதியளித்துள்ளார். மத்திய அரசிடம் பேசி, நெல் குவிண்டாலுக்கு 1650 ரூபாய் வழங்க ஆவன செய்ய வேண்டும்," என்றார்.

**லாரிகள் வேலைநிறுத்தம் தக்காளி விலை குறைந்தது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2011,23:39 IST

ஒட்டன்சத்திரம் : லாரிகள் தொடர் வேலைநிறுத்தம் காரணமாக வியாபாரிகள் வருகை குறைந்ததால் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் தக்காளி விலை பாதியாக குறைந்தது.ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டிற்கு சனிக்கிழமை வார விடுமுறை. இதனை தொடர்ந்து நேற்று வழக்கம் போல் மார்க்கெட் செயல்பட தொடங்கியது. காய்கறிகளின் வரத்தும் அதிகமாக காணப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த அளவிற்கு வியாபாரிகள் காய்களை வாங்க ஆர்டர் கொடுக்கவில்லை. இதனால் தக்காளி உள்ளிட்ட பல காய்களின் விலை குறைந்து காணப்பட்டது.முன்பு 15 கிலோ கொண்ட தக்காளி பெட்டி 90 ரூபாய்க்கு விற்றது. ஆனால் நேற்று அதே அளவு கொண்ட தக்காளி 45 ரூபாய்க்கு விற்றது. இதேபோல் அனைத்து காய்களின் விலையும் சற்று குறைந்திருந்தது.

**வெங்காயம் விலை குறைவால் விவசாயிகள் பாதிப்பு மழையில்லாததால் உற்பத்தியும் குறைந்தது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2011,01:52 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் மழையில்லாமல் விளைச்சலும் குறைந்து, விலையும் குறைந்ததால், வெங்காயம் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.ஸ்ரீவில்லிபுத்தூர்

சுற்று பகுதிகளில் கடந்த மே மாதம் வெங்காயம் நடவு செய்தனர். தற்போது அறுவடை நடந்து வருகிறது. மழை பெய்யாததால், கிணற்று நீரை கொண்டு விளைய வைத்தனர். இந்நிலையில், போதிய விளைச்சல் இல்லாததால், மகசூலும் பாதிக்கப்பட்டுள்ளது. குறைவான வெங்காயம் கிடைத்தாலும், அதற்கேற்ற விலை இல்லை. பயிரிட வாங்கிய கடனுக்காக, குறைந்த விலைக்கே விற்பனை செய்கின்றனர். ஒரு சில விவசாயிகள் மட்டும், மழைக்காலங்களில் அதிக விலை கிடைக்கும் என்பதால் இருப்பு வைத்து உள்ளனர். விவசாயி அய்யனார் கூறியதாவது: கிலோ ரூ. 38 கொடுத்து விதை வாங்கி நடவு செய்தேன். மழை பெய்தால் ஏக்கருக்கு 110 மூடை வெங்காயம் கிடைக்கும். மழை பெய்யாததால் 60 மூடை தான் கிடைத்தது. விலையிலும் வீழ்ச்சியடைந்துள்ளது. கிலோ 10 ரூபாய்க்குதான் கொள் முதல் செய்கின்றனர் , என்றார்.

**எள் சாகுபடி விவசாயிகளுக்குவேளாண் அதிகாரி அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2011,03:12 IST

திருநெல்வேலி:எள் சாகுபடி செய்வது தொடர்பாக விவசாயிகளுக்கு வேளாண்மை துணை இயக்குனர் (வணிகம்) அறிவுரை வழங்கியுள்ளார்.தமிழ்நாட்டில் எள் பரவலாக தை மற்றும் ஆடிப்பட்டங்களில் பயிரிடப்படுகிறது. ஆடிப்பட்டத்தில் எள் பயிர் சாகுபடி செய்ய ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் இயங்கிவரும் உள்நாட்டு மற்றும் சந்தை தகவல் மையம் ஆய்வுகளை மேற்கொண்டு விலை முன்னறிவிப்பு செய்துள்ளது.இதன்படி ஆடிப்பட்டத்தில் அறுவையின் போது அதாவது அக்டோபர் முதல் டிசம்பர் வரையுள்ள மாதங்களில் எள் கிலோவிற்கு ரூ.46 முதல் ரூ.50 வரையிலும் கிடைக்கும். அறுவடையின் போது மழையினால் எள்ளின் தரம் குறைந்தால் அதன் விலை கிலோவுக்கு ரூ.38 முதல் ரூ.40 வரை மட்டுமே கிடைக்கும்.எள் சாகுபடியின் போது ஒரு கிலோ விதையுடன், 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி என்ற பூஞ்சாண கொல்லியை கலந்து விதை நேர்த்தி செய்து பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தியும், சரியான நேரத்தில் எள்ளை விதைத்தும் அதிக எள் உற்பத்தி செய்யலாம் என விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.இத்தகவலை வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) தெரிவித்துள்ளார்.